
UNIVERSITY OF JAFFNA
LIBRARY
13 SEP 2011

02 - 100
10-09-2011
பக்கங்கள்: 24
விலை: 15/=

# Saturday மெயில்

සැටඩේ මේල්
A Fascinating Weekly Bulletin

# மிஸ்டர் பீன்
## ஒய்வு பெறுகிறார்




அடுத்த பக்கம் புரட்டுங்கள்

Registered as a Newspaper at G.P.O.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவர்ச்சிக்கு மாறும் கம்யூனிஸ நாடு






சீனாவில் உள்ள ரயில் நிலையங்களில் சமீபகாலமாக கவர்ச்சி அழகிகளின் நடனத்தால் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து ரயில்வே துறைக்கு வருவாய் அதிகரித்து வருகிறது.

சீன ரயில் போக்குவரத்து உலகளவில் புகழ்பெற்றது. உலகின் அதிவேக ரயில், அதிக வசதிகள் கொண்ட ரயில் எனப் பல சிறப்பு அம்சங்களைக் கொண்டது. இந்நிலையில், ரயில் பயணிகளுக்கு உற்சாகம் அளிக்கும் புதுவித நடனம் ரயில்கள் மற்றும் ரயில் நிலையங்களில் நடந்து வருகிறது.

சீனாவின் புகழ்பெற்ற ஷங்காய் மெட்ரோ ரயில்களில் கடந்த சில நாட்களாக இளம்பெண்களின் கிளுகிளுப்பு நடனத்தைப் பார்க்க முடிகிறது. ஷங்காய் ரயில் நிலையத்தில் ரயில்களில் ஏறும் இந்த இளம் நடன மங்கைகள் ரயில்களில் உள்ள தாங்குக் கம்பங்கள்,இருக்கைகள்,தரை, சுவர் எனப் பல ஸ்டைல்களில் தங்கள் நடனத்தை அரங்கேற்றுகின்றனர்.

மேலும், தங்கள் நடனத்திற்கு இடையே அவ்வப்போது தாங்கள் அணிந்திருக்கும் ஆடைகளை ஒவ்வொன்றாகக் களைந்து பயணிகளைச் சூடாக்குகின்றனர். இதைப் போல சுரங்கப் பாதை ரயில்கள் கடந்து செல்லும். நாஞ்சிங் சுரங்கப் பாதையிலும் அவ்வப் போது நடன மங்கைகளின் ஆட்டத்தைப் பார்க்க முடிகிறது.

கடந்த சில வாரங்களாக இந்தப் பகுதியில் ஆடிவந்த நடன மங்கையர்,மக்கள் மத்தியில் பிரபலமடைந்துள்ளனர். இவர்கள் சில நேரத்தில் ரயில்களிலும் தங்கள் திறமைகளை வெளிப்படுத்துவது உண்டு என அவர்களின் ரசிகர்கள் சிலர் கூறுகின்றனர்.

இந்த நடனத்தால் நீண்டதூர ரயில் பயணத்தை பயணிகள் உற்சாகமாகப் போக்குகின்றனர். இதனால் ரயில்களில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ரயில் நிலையங்களின் வருமானமும் அதிகரித்து வருகிறது.

இந்த நடன மங்கைகளின் கூத்துகளைச் சில பயணிகள் தங்கள் மொபைல்போன்களில் படம் பிடித்து அவற்றை இணையத்தளத்தில் உலாவவிட்டுள்ளனர். இதில் உற்சாகமடையும் நடன மங்கைகள் பல கவர்ச்சி மொடல்களில் நின்று ஆடிப் போஸ் கொடுக்கின்றனர். நடன மங்கைகளின் ஆடைகளும் சீனாவில் பிரபலமடைந்து வருவது குறிப்பிடத்தக்கது.

## மிஸ்டர்...

மிஸ்டர் பீன் தொடரில் இருந்து ஓய்வு பெறுகிறார் பிரபல ஹொலிவூட் நடிகர் ரோவன் ஆட்கின்சன்.

மிஸ்டர் பீனைத் தெரியாத குட்டீஸே இருக்க முடியாது. உலகம் முழுவதும் உள்ள குட்டீஸ்களின் விருப்பத் தொடர் எது என்று கேட்டால் அவர்கள் சொல்லும் பதில் 'மிஸ்டர் பீன்' அந்த நகைச்சுவை தொடரில் மிஸ்டர் பீனாக வந்து நம் வீட்டு குழந்தைகளைக் குலுங்க, குலுங்கச் சிரிக்க வைப்பவர் ரோவன் ஆட்கின்சன் (56 வயது).

பாடசாலை விட்டு வீட்டுக்கு வரும் நம்ம வாண்டுகள் பையை ஒரு பக்கமும் ஷூவை மறுபக்கமும் வீசிவிட்டு அவசர, அவசரமாக உட்கார்வது டி.வி. முன்பு தான். காரணம் இந்த மிஸ்டர் பீன். இந்தத் தொடரை 18 மில்லியன் பேர் கண்டு ரசிக்கிறார்கள் என்றால் பாருங்களேன்.

இந்தத் தொடரின் வெற்றியைப் பார்த்து அதை அடிப்படையாக வைத்து 1997 ஆம் ஆண்டு பீன் தி அல்டிமேட் டிசாஸ்டர் மூவி மற்றும் 2007 ஆம் ஆண்டு மிஸ்டர் பீன்ஸ் ஹொலிடே என்று இரண்டு படங்கள் வெளியாகின.


இத்தனை பிரபலமான தொடரில் இனி மிஸ்டர் பீனாக நடிக்கப்போவதில்லை என்ற ரோவன் ஆட்கின்சன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது; நான் இனிமேல் மிஸ்டர் பீனாக நடிக்க மாட்டேன். எனக்கு வயதாகிவிட்டது. மிஸ்டர் பீன் கதாபாத்திரம் வயதாகாமல் அப்படியே இருப்பது. அதனால் இனியும் நான் மிஸ்டர் பீனாக நடிப்பது சரியல்ல. மிஸ்டர் பீன் எப்பொழுதும் இளமையாக இருந்து தான் நான் பார்த்துள்ளேன். எனவே, வயதாகும் நான் இதில் நடிப்பது உகந்தது அல்ல என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100911-1.indd 2

# மூவரின் தூக்குத் தண்டனையில் கருணாநிதியின் இரட்டை வேடம்



இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோருக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படுவதற்கான உத்தரவு சென்ற பிறகு அதனைத் தடுத்து நிறுத்த சென்னை உயர் நீதிமன்றம் விதித்த இடைக்காலத் தடை எந்த அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்ததோ அதே அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது தமிழக சட்டப் பேரவையில் ஜனாதிபதி கருணை காட்ட வேண்டும் என்று கோரி ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானமும் ஆகும்.

ஜனாதிபதியால் கருணை மனு நிராகரிக்கப்பட்ட ஒருவருக்கு அல்லது பலருக்கு உயிரைக் காப்பாற்றிக்கொள்ள இருக்கும் ஒரே வாய்ப்பு உயர் நீதிமன்றம் அல்லது உச்ச நீதிமன்றத்தை அணுகுவதே இதுவரை உள்ளது. இந்த நிலையில் ஒரு மாநில மக்களின், அரசியல் கட்சிகளின் பொதுவான ஒன்றுபட்ட கருத்தின் அடிப்படையில், மரண தண்டனை நிறைவேற்றத்தை நிறுத்த வேண்டும் என்றும் அவர்களுக்குக் கருணை காட்டி மரண தண்டனையை இரத்துச் செய்ய வேண்டும் என்றும் கோரி தமிழக முதல்வரால் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மனித வாழ்வுரிமைப் போராட்டத்தில் ஒரு புதிய திருப்பமாகும்.

ஆயினும் இது சர்ச்சையாகியும் உள்ளது. காரணம் இப்படி ஒரு மாநில சட்டப் பேரவையில் தீர்மானத்தை நிறைவேற்றி அதையே ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளதை ஏற்பதா நிராகரிப்பதா என்பதை மத்திய அமைச்சரவை அல்லது உள்துறை அமைச்சகம் முடிவு செய்வதற்கு அதற்கான சட்ட அடிப்படை உள்ளதா என்பதை விட ஒரு மாநில மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் தீர்மானத்தை எப்படிக் கையாள்வது என்பது மத்திய அரசு முன் உள்ள மிகப் பெரிய வினாவாகும். இதற்கு சட்ட அடிப்படை இல்லையென்று கூறி சாதாரணமாக நிராகரித்துவிட முடியாது. அதேநேரத்தில் இதுவே முன்மாதிரியாகிவிட்டால், அதன் பிறகு ஜனாதிபதிக்கு அரசமைப்புச் சட்டப் பிரிவு 72 இன் கீழ் கருணை மனு பரிசீலனை தொடர்பாகக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரம் இறுதியானதல்ல என்று ஆகிவிடும் நிலை உள்ளது. எனவே தமிழ்நாட்டு சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள இந்தத் தீர்மானம், மனிதாபிமான பார்வையில் ஒரு பெரும் திருப்பம் என்றாலும் அது அரசமைப்புச் சட்ட ரீதியான வினாவையும் எழுப்புகிறது.



பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரின் கருணை மனுக்களை ஜனாதிபதி நிராகரித்துவிட்ட நிலையில், அவர்களை கருணை காட்டி விடுவிக்க மாநில அரசுக்கு எந்த அதிகாரமும் இல்லை என்பதை தமிழக முதல்வர்–அரசமைப்புச் சட்டப் பிரிவு 257 (1) யைச் சுட்டிக்காட்டி மத்திய அரசு 1991 ஆம் ஆண்டு அனுப்பியிருந்த அறிக்கையை எடுத்துக்கூறி ஒரு விளக்க அறிக்கையை தாக்கல் செய்தார். அரசமைப்புச் சட்டப் பிரிவு 161 இன் கீழ் தமிழக அரசின் சார்பில் ஏற்கனவே (1999 ஆம் ஆண்டு கருணாநிதி முதல்வராக இருந்தபோது) முடிவு எடுக்கப்பட்டுவிட்டால் ஜனாதிபதி கருணை மனுவை நிராகரித்த நிலையில் மீண்டும் அப்பிரிவை பயன்படுத்த முடியாது என்பதே முதல்வரின் விளக்கமாகும்.

மாநில அரசுக்கு அதிகாரம் இல்லாத நிலையிலேயே, 'தமிழக மக்களின் உணர்வுகளையும் அரசியல் கட்சிகளின் கோரிக்கைகளுக்கும் மதிப்பளித்து' மூன்று பேருக்கும் கருணை காட்டுமாறு ஜனாதிபதியை கேட்டுக்கொள்ளும் தீர்மானத்தை நிறைவேற்றினார். எனவே இதன் மீது இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதியையே சார்ந்துள்ளது.

ஆனால், தமிழக சட்டப் பேரவை நிறைவேற்றியுள்ள இந்தத் தீர்மானத்தை வரவேற்றுள்ள முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி 'தனக்கு அதிகாரம் இல்லை என்று யாரோ சொன்னதைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு காலம் கடத்தாமல் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட மூன்று பேரையும் காப்பாற்ற ஜெயலலிதா முன்வர வேண்டும்" என்று கூறியுள்ளார்.

மூன்று பேரையும் காப்பாற்ற சட்டப் பேரவையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அது ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும் என்று முதல்வர் அறிவித்த பின்னர் அதேநாளில் சென்னை உயர் நீதிமன்றமும் தூக்குத் தண்டனை நிறைவேற்ற இடைக்காலத் தடை விதித்துவிட்ட பிறகு 'காலம் கடத்தாமல் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட மூன்று பேரையும் காப்பாற்ற ஜெயலலிதா முன்வர வேண்டும்' என்று கோருவது அர்த்தமற்றதாகும்.

அரசமைப்புச் சட்டப் பிரிவு 161 இன் கீழ் மாநில ஆளுநருக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் 1999 ஆம் ஆண்டு கருணாநிதி தலைமையிலான அமைச்சரவை முடிவெடுத்து மூன்று பேருக்கு மரண தண்டனை வழங்கலாம் என்று பரிந்துரை செய்ததற்குப் பின்னர்தானே, ஜனாதிபதிக்கு மரண தண்டனைக் கைதிகள் கருணை மனுக்களை அனுப்பினார்கள்? அரசமைப்புப் பிரிவு 161 அளிக்கும் அதிகாரம் என்பது ஆட்சி மாற்றத்திற்கும் மனமாற்றத்திற்கும் ஏற்றவாறு ஒவ்வொரு முறையும் புத்துயிர் பெறுமா என்ன?

அதுமட்டுமல்ல, 1999 இல் தனது அமைச்சரவை இந்த மூன்று பேரின் கருணை மனுக்களை நிராகரித்ததற்குக் காரணம் 'அப்போது நாட்டு மக்கள் எல்லோரும் சாந்தன், பேரறிவாளன், முருகன், ஆகியோர் மீது எதிர்ப்புக் கருத்தினைக் கொண்டிருந்தனர்' என்று கருணாநிதி கூறுகின்றார். இதனை வாதத்திற்காக ஏற்றுக்கொண்டாலும், அதன் பிறகு கடந்த ஆண்டு வரை 20 ஆண்டுகளாக பேரறிவாளன் எழுதிய கடிதம் இந்த நாட்டின் தலைசிறந்த நீதிபதிகளில் ஒருவராகக் கருதப்படும் வி.ஆர்.கிருஷ்ண ஐயர் முதல்வராக இருந்த கருணாநிதிக்கு நேரடியாகவே கடிதம், தமிழ்நாட்டில் மரண தண்டனைக்கு எதிராக நடந்த கருத்தரங்குகள், போராட்டங்கள் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி ஏன் மத்திய அரசிடம் கூறி கருணை மனுவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கருணாநிதி பரிந்துரைக்கவில்லை?

இந்த வினாவிற்கு கருணாநிதி முதல்வராக இருந்தபோது அளித்த பதில், 'அந்தக் குடும்பமும் ஒருவரை இழந்துள்ளது. எனவே இதில் சோனியா காந்திதான் முடிவு செய்ய வேண்டும்' என்று கூறினார். இப்படி சோனியாவின் பெயரைக் கூறி தனது பொறுப்பைத் தட்டிக்கழித்தவர்தான். தமிழக சட்டப் பேரவையிலேயே தீர்மானம் நிறைவேற்றிய முதல்வரைப் பார்த்து 'தட்டிக்கழிக்கிறார்' என்று குறை கூறுகிறார்.

தான் முதல்வராக இருந்தபோது கருணை மனுக்களை அனுப்பி இருவரை மரண தண்டனையில் இருந்தும் காத்ததாக கருணாநிதி மற்றொரு அறிக்கையையும் வெளியிட்டுள்ளார். அதில் ஒன்று மரண தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் இருந்த தண்டனைக் குறைப்பு செய்யப்பட்ட விபரமும் ஒன்றாகும்.

புலவர் கலியபெருமாள் மரண தண்டனையை இரத்துச் செய்ய வேண்டும் என்று கோரி ஒரு இலட்சம் பேரிடம் கையெழுத்துப் பெற்ற பொதுவுடைமைவாதிகள், அதனை அப்போது குடியரசுத் தலைவருக்குத்தான் அனுப்பி வைத்தனர். அப்போது தமிழக முதல்வராக இருந்த கருணாநிதிக்கு அல்ல!

1969 ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதியாக இருந்த வி.வி.கிரி ஒரு தலைசிறந்த தொழிற்சங்கவாதியாவார். அவரைச் சந்தித்த தொழிற்சங்கவாதிகள் சிலர், புலவர் கலியபெருமாளின் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். அதற்கு பதிலளித்த வி.வி.கிரி, புலவர் கலிய பெருமாளை எனக்கு ஒரு கருணை மனு அனுப்புமாறு சொல்லுங்கள், நான் நிறைவேற்றுகிறேன் என்று உறுதியளித்துள்ளார். ஆனால், அப்படி கருணை மனு அனுப்ப மறுத்துவிடுகிறார் புலவர் கலியபெருமாள்.

இதனை தொழிற்சங்கவாதிகள் வி.வி.கிரியிடம் கூற, அவர் மக்களிடம் கையெழுத்துப் பெற்று அவர் சார்பாக நீங்கள் அனுப்புங்கள் என்று ஆலோசனை கூற அதன்படியே ஒரு இலட்சம் பேரிடம் கையெழுத்துப் பெற்று அனுப்பியும் வைத்தனர். புலவர் கலியபெருமாளுக்கு ஜனாதிபதி கருணை காட்டி தண்டனைக் குறைப்பு செய்வார் என்று தெரிந்தவுடன் தமிழக அமைச்சரவையைக் கூட்டி மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்குமாறு அமைச்சரவை முடிவு செய்து அதை ஆளுநருக்கு அனுப்பி வைத்தார் கருணாநிதி ஆக.கருணாநிதியின் அன்றைய நடவடிக்கை அரசியல் பெருமை பெற முண்டியடித்துக் கொண்டு எடுத்த முடிவுதானே தவிர, கருணையின் பாற்பட்டதல்ல.

இந்த உண்மையே அப்படியே மறைத்து, தானே முன்னெடுத்து ஆளுநருக்கு பரிந்துரை செய்ததாக இப்போது அறிக்கை விடுக்கிறார். 'புலவர் கலியபெருமாள் மீது பொய் வழக்குப் போட்டு தண்டனை வாங்கித் தந்ததும் கருணாநிதிதான் பிறகு அவருடைய தண்டனையைக் குறைக்குமாறு ஆளுநருக்குச் சொன்னதும் கருணாநிதிதான்' என்று அந்த நிகழ்வை முழுவதும் அறிந்தவர் கூறுகிறார்.

கடந்த 5 ஆண்டுகளாக, 5 ஆவது முறையாக தமிழ்நாட்டின் முதல்வராக இருந்த கருணாநிதி அப்போது இந்த மூவரின் மரண தண்டனையைக் குறைக்குமாறு வந்த கோரிக்கைகளையெல்லாம் தனது ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ளும் கூட்டணி தர்மத்தோடு–நிராகரித்து வந்தவர், இப்போதுள்ள முதல்வரின் நேர்த்தியான நடவடிக்கையையும் தவறான புரிதலுக்கு உட்படுத்த முனைந்திருப்பது தரமற்ற மனப்போக்காகும்.

எந்த ஒரு குற்றச் செயலிற்கும் தண்டனை இருக்க வேண்டும். ஆனால், அது குற்றவாளியை மனிதனாக மாற்றுவதற்காக இருக்க வேண்டுமே தவிர, அவனை மாய்த்துவிடுவதாக இருக்கக்கூடாது. அப்படிப்பட்ட தண்டனை எதுவாயினும் அவை யாவும் சட்டபூர்வமான கொலை என்றே ஆகும் என்ற அடிப்படையிலேயே மரண தண்டனைக்கு எதிராக சர்வதேச அளவில் இயக்கம் நடந்துகொண்டிருக்கிறது. அதற்கு வலிமை சேர்க்கும் விதத்தில் அமைந்த தமிழக சட்டப் பேரவைத் தீர்மானம், சட்டத்தையும் தாண்டிய மிகச் சிறந்த முன்னுதாரணமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஓஷோ தன் புத்தகம் ஒன்றில் கணவன் மனைவி உறவை மூன்று விதமாக *Dependency, Independency, Inter dependency* எனப் பிரித்து ஒவ்வொன்றையும் மிக அருமையாக விளக்குகிறார்.முதலாவதாக உள்ள *Dependency* மிகக் கொடூரமானது.கணவன் மனைவி ஒருத்தரை ஒருத்தர் சார்ந்து இருக்கும் போது இருவருக்கும் இடையில் நிறைய எதிர்பார்ப்புகளையும் அவை ஈடேறாத போது மிகுந்த ஏமாற்றத்தையும் உண்டாக்குகிறது. அதன் பலனாக உறவு முறிந்து போகவும் வாய்ப்புள்ளது.

*Independency* என்பது ஒருத்தரை மற்றொருவர் எதற்கும் சார்ந்தில்லாத ஒரு சூழல். இது இன்னும் கொடூரமானது.இத்தகைய உறவானது தம்பதியர் இடையே எந்த ஒரு பிடிப்பையோ அன்பையோ ஏற்படுத்துவதில்லை. தாமரை இலை தண்ணீர் போலதான் இவ்வுறவு. ஆனால் முதல் விவரித்த இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட ஒரு அருமையான நிலை தான் *Inter-dependency* ஈருடல் ஓருயிர் போன்ற தெய்வீக நிலை. அன்பும் பாசமும் புரிதலும் நிறைந்த எவ்வித விலங்குகளும் அற்ற சார்ந்தும் சாராமலும் உள்ள ஒரு உன்னதமான மேன்மையான நிலை. *Inter dependency* நிலையை எட்டிய எந்த ஒரு உறவும் தோற்றுப் போவதில்லை.

இன்றைய காலகட்டத்தில் தம்பதியர் இடையே எழும் பிரச்சினைகளுக்கு முக்கிய காரணமாக பேசப்படும் மற்றொரு விடயம் *Possessiveness.* இது இருவருக்கும் மிகுந்த வலிமையையும் வேதனையும் தருவதோடு உறவை உடைத்தெறிந்தும் விடுகிறது. விவேகானந்தா *Possessiveness* பற்றி பின்வருமாறு அற்புதமாக விளக்கியுள்ளார். உள்ளங்கையில் நீரை அள்ளும்போது கையை மூடாமல் இருக்கும் போதுதான் நீர்த் தங்கி இருக்கும். அதே கையை மூடி நீரை அடைத்து வைக்க நினைத்தால் மிக எளிதாக வழிந்தோடிவிடும்.இத்தவறைத்தான் பலர் இன்று செய்கின்றனர்.ஒருவரை ஒருவர் மூச்சுத் திணற வைக்கும் அன்பால் கட்டி வைக்க நினைக்கும்போது உறவு நிலைப்பதில்லை.

ஒரு உறவுக்கு அடிப்படையான இத்தகைய சின்னஞ்சிறு விடயங்களில் கவனமாக இருந்தாலே குடும்ப நல நீதிமன்றங்களை நாடும் நிலை ஏன் வரப்போகிறது?





# 100 சிகரட்டுகளுக்கு ஒப்பான ஒரு நுளம்புச்சுருள்

பருப்பு,எண்ணெய் என்று வீட்டு மளிகைப் பட்ஜெட்டில் நுளம்புச் சுருள்களும் சேர்ந்துவிட்டன. ஒவ்வொரு வீட்டிலும் மாலை 6 மணிக்கு பூஜையறையில் விளக்கு ஏற்றுகிறார்களோ இல்லையோ கண்டிப்பாக நுளம்புச்சுருள் கொளுத்தாமல் இருப்பதில்லை. ஏ.சி. அறையாக இருந்தாலும் நுளம்புச்சுருள் புகை மண்டிய நிலையில் தான் தூங்குகின்றனர் பலர். இப்படி நுளம்புச் சுருள் இல்லாமல் வாழ்க்கை இல்லை என்று நடுத்தர மக்கள் நினைக்கும் அளவுக்கு நுளம்புகளால் அவர்கள் படும் பாடு பரிதாபமாகவுள்ளது.

எல்லோரும் பேட்டும் கையுமாகத் தான் வீட்டில் அலைய வேண்டியிருக்கிறது. பேட் என்றவுடன் கிரிக்கெட் வீரராகி விட்டதாக நினைக்க வேண்டாம். மொஸ்கிடோ பேட் அது. நுளம்புகள் சிக்கி பட் பட் என்று வெடித்தால் அவர்கள் முகத்தில் ஏற்படும் மகிழ்ச்சி இருக்கிறதே சதம் போட்டது மாதிரி. இப்படியெல்லாம் நுளம்புகளுடன் ஒரு போரை நடத்தி வரும் இந்த நடுத்தர மக்கள் பயன்படுத்தும் நுளம்புத்திரி பற்றி ஒரு பகீர் மருத்துவ ஆய்வுத் தகவல் வெளியாகியுள்ளது.

மலேசியாவில் மருத்துவ நிபுணர்கள் மேற்கொண்ட ஆய்வில், சிகரெட் பிடித்தால் நுரையீரல் பாதிக்கிறது என்று பல ஆண்டுகளுக்கு முன்பே கண்டுபிடிக்கப்பட்டு விட்டது. ஆனால், ஒரு நுளம்புச்சுருள் கொளுத்தி அதை மனிதன் நுகர்ந்தால் சுவாசத்தில் கலந்தால் நுரையீரலில் ஏற்படும் பாதிப்பு மிகவும் மோசமானது. 100 சிகரெட் பிடித்தால் எந்தளவுக்குப் பாதிப்பு ஏற்படுமோ, அதை ஒரு நுளம்புச்சுருள் செய்துவிடும்.

புதுடில்லியில் உள்ள இந்திய மருத்துவ ஆய்வு கவுன்சில், இந்திய மருத்துவ சங்கம் மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் அறிவியல் மையம் சார்பில் காற்று மாசு மற்றும் சுற்றுச் சூழல் பாதிப்பு பற்றிய சர்வதேச கருத்தரங்கு சமீபத்தில் நடந்தது. அதில் மருத்துவ நிபுணர் சந்தீப் சால்வி பேசும்போது மலேசிய ஆய்வு அறிக்கை பற்றி விளக்கினார்.

டில்லி உட்பட பெரு நகரங்களில் மக்கள் காற்று மாசுக்களால் படும் பாடு அதிகம். இதனுடன் நுளம்புகளால் ஏற்படும் பாதிப்பும் அதிகமாகவுள்ளது. இதற்காகப் பலரும் நுளம்புச் சுருள்களைத் தான் நாடுகின்றனர். சிகரெட் போல இதுவும் ஒரு அடிமையாக்கும் பொருளாகிவிட்டது என்றார். சுற்றுச் சூழல் பாதிப்புத் தொடர்பாக இந்திய டாக்டர்கள் பல ஆய்வுகளைச் செய்து அறிக்கைகளை வெளியிட்டால் தான் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படும். இனிவரும் காலங்களில் சுற்றுச்சூழல் பாதிப்பு இன்னும் அதிகமாகவே இருக்கும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறந்த உடலை அழிக்க புதுவழி

இறந்தவர்களின் உடலை சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பில்லாமல் அழிக்க புதிய வழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் புளோரிடாவில் இறுதிக் கிரியை செய்வதற்கான ஒரு இடத்தில் 'அல்கலைன் ஹைட்ராலிஸிஸ்' எனப்படும் புதிய முறை நடைமுறைக்கு வரவுள்ளது.





காரத்தன்மை கொண்ட இரசாயன திரவத்தில் தசைகள் கரைகின்றன. இந்த முறையின் கீழ் தண்ணீரும் பொட்டாசியம் ஹைடேராக்சைடும் கலந்த திரவத்தில் உடல் மூழ்கடிக்கப்படும். திரவ அழுத்தம் 10 அட்மாஸ்பியர் என்ற அளவுக்கு உயர்த்தப்படும். பின்னர் இந்தத் திரவம் இரண்டரை மணி முதல் மூன்று மணி நேரத்துக்கு 180 டிகிரி செல்ஷியஸ் அளவுக்கு சூடாக்கப்படும்.

இப்படிச் செய்யும் போது உடல் தசைகள் அனைத்தும் கரைந்து போய்விடுகிறது. தசைகள் கரைந்து போன இந்தத் திரவம் நகரின் கழிவு நீர் வடிகாலில் கொட்டப்பட்டுவிடும். இதனால் பொதுச் சுகாதாரத்துக்கு எவ்வித கேடும் ஏற்படாது என்று இந்தப் புதிய வழிமுறையை உருவாக்கிய சேண்டி சல்லிவன் தெரிவித்துள்ளார். கரையாமல் இருக்கின்ற எலும்புகள் பின்னர் மின்சார தகனக் கருவியான 'கிரிமுலேட்டர்' என்ற இயந்திரத்தில் வைத்து உடைக்கப்பட்டு சாம்பலாக்கப்படும்.

உடலில் செயற்கை மூட்டு, செயற்கைப் பல் போன்ற உலோகப் பொருட்கள் உபயோகிக்கப்பட்டிருந்தால் அவை பாதுகாப்பாக பிரித்து எடுக்கப்படும். இந்தப் புதிய இயந்திரத்தை பயன்படுத்த அமெரிக்காவின் புளோரிடா மாகாணம் அனுமதி அளித்துள்ளது.

ஐக்கிய ராஜ்ஜியத்திலும் இந்த புதிய முறையைப் பயன்படுத்த தேவையான சட்டத் திருத்தங்கள் செய்யப்படுமென சல்லிவன் நம்புகிறார். சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத வழிமுறை இது பசுமையான முறை என்றும் கூறப்படுகிறது. ஐக்கிய ராஜ்ஜியத்தைப் பொறுத்தவரை சடலங்களை எரியூட்டுவதால் மட்டும் காற்றில் பாதரசத்தின் அளவில் 16 சதவீத மாற்றம் ஏற்படுகிறது. இந்தப் பிரச்சினையை சமாளிக்க பல எரியூட்டு நிலையங்களில் பாதரசத்தை வெளிவிடாமல் தடுக்கும் வடிகட்டிகள் அதிக செலவு செய்து பொருத்தப்படுகின்றன.

இந்தப் புதிய முறையால் செலவு குறைவதோடு, உடல் எரிக்கப்படும் போது வெளியாகும் வெப்ப வாயுக்களின் அளவும் மூன்றில் ஒரு பங்கு குறையும். எரிசக்தி பயன்பாடும் கிட்டத்தட்ட 85 சதவீதம் குறைகிறது.

# விவாகரத்து செய்தால் உடற்பருமன் அதிகரிக்கும்

உலகின் பல்வேறு பகுதிகளிலும் பல சுவாரஷ்யமான ஆய்வுகள் நடந்து வருகின்றன. அந்த வகையில் திருமணமான பெண்கள், விவாகரத்தான ஆண்களின் உடல் பருமன் விரைவில் அதிகரிக்கிறது என்று அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிலும் இடுப்பு பகுதியில்தான் அதிகம் சதை போடுகிறதாம். உடல் பருமனால் உலகம் முழுவதும் ஏராளமானவர்கள் அவதிப்படுகின்றனர். இது தொடர்பாக பல்வேறு ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன.

அமெரிக்காவின் ஒஹியோ மாநில பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் டிமித்திரியுமின் தலைமையில் உடல் பருமன் குறித்து சமீபத்தில் மேற்கொண்ட விரிவான ஆய்வுகளின் முடிவுகள் பலரது புருவங்களையும் உயரச் செய்துள்ளது. 1986 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை 10 ஆயிரத்துக்கும் அதிகமான ஆண், பெண்களிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இந்த ஆராய்ச்சி நடந்தது.

ஆய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

பெண்கள் திருமணத்துக்குப் பிறகும், ஆண்கள் விவாகரத்தான பிறகும் உடல் எடை விறுவிறுவென அதிகமாகிறது. இதில் பெரும்பாலானவர்கள் 30 வயதைக் கடந்தவர்கள். பெரும்பாலும் இடுப்புப் பகுதியில்தான் அதிகம் சதை போடுகிறது. இந்த நிலை 50 வயது வரை நீடிக்கிறது. திருமணமான 2 ஆண்டுகள் வரை அல்லது விவாகரத்தான 2 ஆண்டுகள் வரை இத்தகைய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.



திருமணம் ஆகாதவர்களைவிட திருமணம் ஆனவர்கள் குண்டாகும் வாய்ப்பு அதிகம். அப்ப இனி வரும் காலங்களில் திருமணமான பொம்பிளைகள் ஒழுங்கா ஜிம்முக்கு போகவேணும் போல இருக்கு... விவாகரத்தான ஆம்பிளைகள் நேரத்துக்கு ஒன்றைப் பார்த்துக் கட்ட வேணும் என்று சொல்லாமல் சொல்கிறார்கள் விஞ்ஞானிகள்...

# வைரக் கிரகம்

வைரத்தால் ஆன ஒரு கிரகத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

மாபெரும் நட்சத்திரங்கள் தங்களது எரிசக்தி அனைத்தையும் இழந்து, சுருங்கும் போது பல்ஸார்கள் எனப்படும் ஒலியை வெளிப்படுத்தும் சிறிய நியூட்ரான் நட்சத்திரங்களாக மாறும். இந்த பல்ஸார்கள் பெரும்பாலும் தனித்தே காணப்படும்.

சில நேரங்களில் கிரகங்களுடன் கூடிய சில பல்ஸார்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இந் நிலையில் அவுஸ்திரேலியாவின் நியூ செளத் வேல்ஸ் பகுதியில் உள்ள பார்க்ஸ் ரேடியோ டெலஸ்கோப் விண்வெளி ஆய்வு மையத்தை சேர்ந்த விஞ்ஞானிகள், புதிய பல்ஸார் ஒன்றை கண்டு பிடித்தனர். இதற்கு *PSRJ1719-1438* என பெயரிடப்பட்டுள்ளது.

பூமியிலிருந்து 4,000 ஒளி ஆண்டுகள் தூரத்தில் இருக்கும் இந்த பல்ஸார் நட்சத்திரத்தை ஒரு கிரகமும் சுற்றி வருகிறது.

இது போன்ற கிரகங்கள் பெரும்பாலும் ஹைட்ரஜன் அல்லது ஹீலியத்தால் ஆனவையாக வெறும் வாயுக் கிரகங்களாக இருக்கும்.

ஆனால், இந்தக் கிரகம் கார்பன். ஒக்ஸிஜனைக் கொண்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மேலும் அதன் அழுத்தமும், நிறையும் நினைக்க முடியாத அளவுக்கு மிக மிக் அதிகமாக உள்ளதால், அங்குள்ள கார்பன் இறுதி வைரம் அல்லது கிரிஸ்டல் போன்ற நிலையில் இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.



இதனால் அந்த கிரகமே, இதுவரை நாம் கற்பனை செய்து பார்த்திராக வகையில் வைரம் அல்லது கிரிஸ்டல்களாக ஜொலித்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

இந்தக் கிரகம் அந்த பல்ஸாரை சுற்றி வருவதோடு, ஒரு நிமிடத்துக்கு நூற்றுக்கும் அதிகமான முறை தன்னைத் தானே சுற்றிக் கொண்டும் உள்ளது. இது 60,000 கி.மீ.விட்டம் *(diameter)* கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவம்

# ஓரினச்சேர்க்கையால் மோசமாக பரவும் எயிட்ஸ்



'ஓரினச்சேர்க்கை'யால் எயிட்ஸ் மற்றும் பால்வினை நோய்கள் மேற்கத்திய நாடுகளில் கடுமையாக பரவுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிற ஐரோப்பிய நாடுகளில் பலவற்றில் கொடுமையான எச்.ஐ.வி.கிருமியால் வரும் எயிட்ஸ் மற்றும் பால்வினை நோய்களால் 'ஓரினச்சேர்க்கையில்' ஈடுபடும் இளைஞர் மற்றும் யுவதிகளை கடுமையாக பாதித்து பரவிக்கொண்டிருப்பது 'சிக்மா எயிட்ஸ் ஆய்வுக் குழும' ஆய்வுகளின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவில் குறிப்பாக எச்.ஐ.வி. எயிட்ஸ் மற்றும் பால்வினை நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள 'ஓரினச்சேர்க்கையில்' ஈடுபடுவோரிடையே, இதே நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள சாதாரணமான 'ஆண் பெண்' உடலுறவை மேற்கொள்ளும் மக்களைவிட பல மடங்கு அதிகமாக பாதித்துள்ளது இந்தப் புதிய 'சிக்மா எயிட்ஸ் ஆய்வுக் குழுமத்தின்' ஆய்வியலில் தெரிய வந்துள்ளது.

அமெரிக்காவில் மட்டும் கடந்த பத்தாண்டுகளில் கிட்டத்தட்ட ஐந்து இலட்சத்து ஐம்பத்து ஐயாயிரம் ஓரினச் சேர்க்கையாளர்கள் எச்.ஐ.வி./ எயிட்ஸ் நோய்த் தொற்றுக்கு ஆளாகியுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இவர்களில் சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட 'ஓரினச்சேர்க்கையாளர்கள்' எயிட்ஸ் நோய்த் தொற்றால் இறந்து போனதாக அஞ்சப்படுகிறது. அமெரிக்காவில் உள்ள மொத்த எயிட்ஸ் நோயாளிகளில் 48 சதவீதம் பேர் 'ஓரினச் சேர்க்கை' பழக்கத்தால் இந்த நோய்க்கு இலக்காகியுள்ளதாகத் தெரிகிறது.

இதேபோன்று இங்கிலாந்தில் நடத்தப்பட்ட ஆய்வில் 'ஓரினச்சேர்க்கையால்' எயிட்ஸ் மற்றும் பால்வினை தாக்கியவர்களின் சதவீதம் சாதாரண ஆண் மற்றும் பெண் இடையேயான செக்ஸ் உறவில் ஈடுபடுபவர்களைவிட பல மடங்கு அதிகமாக இருந்தது கண்டறியப்பட்டுள்ளது. அதேவேளை, இவ்வாறான 'எயிட்ஸ் மற்றும் பால்வினை' நோய்களால் பாதிக்கப்பட்டவர்களில் 53% பேர் 35 வயதுக்கும் குறைவான வயதுப் பிரிவினர் என்ற அதிர்ச்சியளிக்கும் உண்மையும் தெரிய வந்துள்ளது. இதுபோன்ற உலகெங்கும் பல நாடுகளில் ஒரே நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வு 'ஓரினச் சேர்க்கையால்' எயிட்ஸ் பரவும் அபாயத்தை உறுதி செய்துள்ளது.

குறிப்பாக 'ஓரினச்சேர்க்கையாளர்கள்' குறிப்பிடத்தக்க அளவில் பெருகிவரும் இலத்தீன் அமெரிக்காவில் எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளவர்களிடையே நடத்தப்பட்ட ஆய்வில் எயிட்ஸ் நோய்த் தோற்று குறித்து இதுவரை வெளிவராத அதிர்ச்சிகரமான பல புதிய உண்மைகள் வெளிவந்துள்ளன.

முதலாவதாக, இலத்தீன், அமெரிக்காவில் எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் பரவலுக்கு பிரதான காரணமாக 'ஓரினச் சேர்க்கை' விளங்குவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக பிரேசில் மற்றும் கொலம்பியா நாடுகளில் 'ஓரினச்சேர்க்கையாளர்களிடையே' பரவும் எயிட்ஸ் நோய்த் தாக்கம் மிகக் கடுமையாக இருப்பது தெரியவந்துள்ளது. இலத்தின், அமெரிக்க நாடுகளில் 'எயிட்ஸ் நோயால்' தாக்கப்பட்டவர்களில் 40% பேர் 'ஓரினச்சேர்க்கை' மூலமே நேரடியாக எயிட்ஸ் நோய்த் தாக்குதலுக்கு ஆளாகியுள்ளனர்.

இதைவிட மிகக் கொடுமையான ஒரு உண்மை, இந்த ஆய்வு முடிவுகளில் வெளிவந்துள்ளது. இந்த நாடுகளில் 'ஓரினச்சேர்க்கையாளர்களால்' மறைமுகமாக எயிட்ஸ் நோய்த் தொற்றிக்கு ஆளாவோரின் எண்ணிக்கை சுமார் 10% முதல் 25 சதவீதமாக உள்ளது என்பதேயாகும். இவ்வாறு மறைமுகமாக எயிட்ஸ் நோய்த் தொற்றுக்கு ஆளாவோர், 'ஓரினச்சேர்க்கையாளர்களை' திருமணம் செய்து கொண்டதால், எயிட்ஸ் நோய்க்கு ஆளாகியுள்ளனர் என இந்த 'சிக்மா எயிட்ஸ் ஆய்வு குழுமத்தின்' ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

எச்.ஐ.வி. மற்றும் எயிட்ஸ் பரவலுக்கு முக்கிய காரணம் எயிட்ஸ் நோய் பற்றிய அறியாமையுடன் பெரும்பாலான மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்த இளைஞர்கள் இருப்பதுதான் என்பதும் இந்த ஆய்வில் தெரியவந்துள்ள மற்றொரு ஆச்சரியமான உண்மையாகும். வளர்ந்த மற்றும் கல்வியறிவு மிகுந்த நாடுகள் என்று கருதப்படும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் பொதுவாகவும் குறிப்பாக இங்கிலாந்து நாட்டிலும் 'ஓரினச்சேர்க்கை' செய்யும் இளைஞர்களிடையே எயிட்ஸ் நோய் குறித்த விழிப்புணர்வு மிகவும் குறைவாக உள்ளது தெரியவந்துள்ளது. ஓரினச்சேர்க்கையின் மூலம் எயிட்ஸ் பரவல் பற்றிய விழிப்புணர்வு குறைவாக உள்ள பகுதிகளில் எயிட்ஸ் நோயின் பரவல் மற்றும் தாக்கம் அதிகமாக உள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதைவிட மிகவும் மோசமான விடயம் என்னவென்றால் எயிட்ஸ் பற்றிய சரியான அறிவுள்ள, உயர் கல்வி மற்றும் மருத்துவத் துறையில் உள்ள 'ஓரினச் சேர்க்கையாளர்களிடையே', 'எயிட்ஸ்' தங்களைத் தாக்க வாய்ப்பில்லை என்று நிலவும் தவறான நம்பிக்கையாகும். இவ்வாறு 'எயிட்ஸ்' தங்களைத் தாக்க வாய்ப்பில்லை என்று கருதும் உயர்கல்வி, வேலை மற்றும் பொருளாதார பிரிவினரிடையே உள்ள 'ஓரினச்சேர்க்கையில்' ஈடுபடும் 35% பேருக்கு எயிட்ஸ் நோய்த் தோற்று ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்தில் நடத்தப்பட்ட இந்த ஆய்வுகளில் 'ஓரினச்சேர்க்கை'யில் ஈடுபடுவோரிடையே எயிட்ஸ், கிளமீடியா, கோனோரியா மற்றும் பிறப்புறுப்பு ஹெர்பிஸ் ஆகிய நோய்ப் பாதிப்பு கடந்த பத்து வருடங்களில் 100%க்கும் மேற்பட்ட அளவில் அதிகமாகியுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

100911-1.indd 6
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Saturday மெயில் 100 ஆவது இதழ்

# வறுமையில் வாடும் இந்தியாவின் முதல் 'டெஸ்ட் டியூப் பேபி'



25 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது 1986 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6 ஆம் திகதியன்று மும்பை கே.ஈ.எம்.மருத்துவமனையில் குழந்தையைப் பெற்றெடுத்தார் மணி சாவ்தா என்ற இளம்பெண்.

இதிலென்ன விசேஷம் இருக்கிறது?மணி சாவ்தா பெற்றெடுத்த பெண் குழந்தை ஹர்ஷா சாவ்தா தான் இந்தியாவின் முதல் டெஸ்ட் டியூப் பேபி.25 ஆவது பிறந்தநாளையொட்டி மும்பை சித்திவிநாயகர் கோவிலுக்கு வழிபட வந்திருந்த ஹர்ஷாவை ஊடகவியலாளர்கள் சந்தித்த போது;

நானொன்றும் வித்தியாசமானவள் இல்லை.எல்லோரையும் போலத்தான் நானும்.ஆனாலும் நான் எப்போதும் என்னை ஸ்பெஷலாக உணர்வேன் என்று கூறும் ஹர்ஷா மும்பை பல்கலைக்கழகத்தில் பயின்ற வணிகவியல் பட்டதாரி. இவர் கடந்த நான்காண்டுகளாக ஒரு தனியார் நிறுவனத்தில் கிளார்க் ஆக பணிபுரிந்து வந்தார்.ஆனால் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஹர்ஷா இரண்டு மாதங்களுக்கு முன் அந்த வேலையை இழந்துவிட்டார்.தற்போது முழுமையாக உடல் நலம் தேறிவிட்டாலும் ஹர்ஷாவுக்கு இப்போதைக்கு வேலையில்லை.வேலை தேடிக் கொண்டிருக்கிறார்.மும்பையின் ஜோகேஸ்வரி பகுதியில் ஒரு வாடகை வீட்டில் தனது தாயுடன் வசித்து வருகிறார்.நான்காண்டுகளுக்கு முன் இவரது தந்தை காலமாகிவிட்டார்.இப்போது குடும்பப் பொறுப்பு முழுவதும் ஹர்ஷாவின் தலையில்தான்.



இவரது அம்மா மணி சாவ்தா கூறுகையில்;

இந்தியாவின் முதல் ஐ.வி.எப்.(இன் விட்ரோ பெர்ட்டிலைசேஷன்) தாய் என்ற வகையில் நான் பெருமைப்படலாம்.ஆனால் எனது மகள் சந்தோஷமாக இல்லாததால் நானும் சந்தோஷமாக இல்லை.நாங்கள் வறுமையில்தான் வாடுகிறோம்.இன்றுவரை எங்களால் சொந்த வீட்டில் குடியேற முடியவில்லை.பணப் பிரச்சினையின் காரணமாகத்தான் நாங்கள் ஹர்ஷாவின் பிறந்த நாளைக் கூட கொண்டாடவில்லை.சித்திவிநாயகர் கோவிலுக்கு மட்டும் அவள் போய் விட்டு வந்தாள் என்கிறார் வாடிப்போய்.

மணி சாவ்தாவுக்குப் பிரசவம் பார்த்த மருத்துவரான டாக்டர் இந்திரா இந்துஜா அந்த பிளாஷ் பேக்கை நினைவுகூர்ந்தபோது...என் வாழ்க்கையிலேயே மிகவும் மகிழ்ச்சியான தருணம் அது.எனக்கு அப்போது 35 வயது தான்.சோதனைக் குழாய் முறையில் மணி சாவ்தா கர்ப்பிணியாக நாங்கள் ரொம்பவே சிரமப்படவேண்டியிருந்தது.இப்போது ஐ.வி.எப்.முறை மிகவும் வெற்றிகரமான ஒன்றாக ஆகிவிட்டபோதிலும் இதற்குக் காப்பீடு அளிக்க ஒரு காப்பீட்டு நிறுவனம் கூட முன்வரவில்லை என்கிறார். தற்போது ஐ.வி.எப். முறைக்கு ஒரு இலட்சத்தில் இருந்து ஒன்றரை இலட்சம் வரை செலவாகிறது.இம்முறையில் நிபுணரான டாக்டர் நந்திதா பால்ஷேத்கர் இந்தச் சிகிச்சைக்கு வரும் பெண்கள் ஏன் காப்பீடு நிறுவனங்கள் இதற்குக் காப்பீடு அளிப்பதில்லை என்று புரியாமல் விழிக்கிறார்கள் என்று கூறுகிறார்.

இதற்கு காப்பீட்டுத்துறை நிபுணர் ஒருவர் ஐ.வி.எப்.மிகப்பெரிய அளவில் பரவலாகச் செய்யப்படுவதில்லை.நம் நாட்டில் இந்தச் சிகிச்சை முறையில் வெற்றி விகிதமும் குறைவாக இருக்கிறது.எனவே எங்களைப் பொறுத்தவரை இது மிகவும் ரிஸ்க்கான ஒன்று என்று காரணம் கூறுகிறார்.

# உடைத் தெரிவில் சில ஆலோசனைகள்

பெரிய மார்பகங்களைக் கொண்ட பெண்கள் தங்களுக்குப் பொருத்தமான உடைகளைக் கண்டறிவது என்பது சற்றுச் சிக்கலான வேலைதான். கடைக்குப் போனோமா, உடைகளை எடுத்தோமா என்று வந்துவிட முடியாது. தங்களுக்குப் பொருத்தமான உடைகளைத் தேடிக் கண்டுபிடிப்பதற்குள் அவர்களுக்குப் போதும் போதுமென்றாகிவிடும்.

சிறிய மார்பகங்களைக் கொண்ட பெண்களுக்குப் பெரும்பாலும் இந்தச் சிரமம் இருப்பதில்லை. மேலும், அவர்களுக்கு மார்பகங்களை எடுப்பாக்கிக் காட்டும் வகையிலான உடைகள் தாராளமாகக் கிடைக்கின்றன. ஆனால், பெரிய மார்பகப் பெண்களுக்கு இந்த சௌகரியங்கள் இல்லை.

பெரிய மார்பகங்களைக் கொண்ட பெண்கள் எந்த மாதிரியான உடைகளைத் தேர்வு செய்யலாம் என்பதற்குச் சில டிப்ஸ்கள் இதோ...

மூடிய கழுத்துடைய உடைகளை ஒருபோதும் தேர்வு செய்யாதீர்கள். அப்படிப்பட்ட உடைகள் உங்களது மார்பகங்களை மேலும் பெரிதானதாகக் காட்டிவிடும்.

அதிக கிளீவேஜ் தெரியும்படியான உடைகளையும் தவிர்ப்பது நல்லது. இது அழகாகக் காட்டுவதற்குப் பதில் அகோரமாகக் காட்டிவிடும்.



மிகவும் இறுக்கமான உடைகளைக் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும். சற்றே லூசான உடைகளைத் தேர்வு செய்வது புத்திசாலித்தனம்.


குர்தா உள்ளிட்ட உடைகளைத் தாராளமாகத் தேர்வு செய்யலாம். இது அழகாகவும் காட்டும். அகோரத்தையும் குறைக்கும். இதுபோன்ற நீளமான உடைகள் உங்களது உடல்வனப்பைக் காட்டுமே தவிர அதன் அளவைக் குறைத்தே காட்டும். எனவே இது சௌகரியமானது.

சல்வார் போன்ற உடைகளை அணியும்போது துப்பட்டாவை மார்புக்குக் குறுக்கே இருப்பது போல மார்பகங்களை மூடுவது போலப் போட்டுக் கொள்வது நன்றாக இருக்கும்.

கழுத்தை ஒட்டிய பேஷன் கவரிங் நகைகளைப் போட்டுக் கொள்வது இன்னொரு புத்திசாலித்தனமான செயல். இதுபோல போடும் போது மார்பகங்களுக்குப் பதில் உங்களது கழுத்தை நோக்கி மற்றவர்கள் பார்வை செல்லும். உங்களுக்கும் அழகு கூடித் தன்னம்பிக்கையை அதிகரிக்க உதவும்.

இதுபோல சின்னச் சின்ன பேஷன் மாற்றங்களைக் கடைப்பிடிப்பதன் மூலம் உங்களது அழகையும் கூட்டலாம். மற்றவர்களின் பார்வையிலிருந்தும் தப்பலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அக்கம் பக்கம்

# அழகிய தேவதைக்குள் ராட்சசி

அவளுக்கு தேவதை போன்ற அழகு. ஈர்ப்பு மிகு கண்கள், எடுப்பான உடல்வாகு. பார்ப்பவர்களைக் கிறங்கவைக்கும் இடை,உடை,நடை! அவளைக் காதலியாக அடைந்ததற்கு அந்த இளைஞன் ரொம்பவும் கர்வப்பட்டான்., அவள் கோல்சென்டர் ஒன்றில் வேலை பார்ப்பதாகக் கூறியிருந்தாள். அந்த இளைஞன்ல சொப்ட்வேர் நிறுவனம் ஒன்றில் கைநிறைய சம்பாதித்துக் கொண்டிருக்கிறான். வெளியூரைச் சேர்ந்த அவன் வேலை பார்க்கும் அலுவலகத்தின் அருகில் தனியறை எடுத்துத் தங்கியிருந்தான்.

ஒரு சில சந்திப்புகளிலே அவள் உரிமை எடுத்துக் கொண்டு பழகியதால் என் அறைக்கு வாயேன் பேசிக் கொண்டிருக்கலாம் என்று அழைத்தான். இவளும் சென்றாள். உன் கண்களைப் பார்த்தாலே நான் கிறங்கிப் போகிறேன். அதனால் கண்களில் முத்தமிட விரும்புகிறேன் என்று ஆழம் பார்த்தான்.

அதெல்லாம் முடியாது. முதலில் கண் என்பீர்கள்... அப்படியே கீழ் இறங்கி என்னென்னவெல்லாமோ செய்வீர்கள். அதெல்லாம் திருமணத்திற்குப் பிறகுதான் என்று அவள் கூறிய தொனியும் காட்டிய நளினமும் சும்மா பேச்சுக்குத்தான் அப்படிச் சொல்றேன்.நீங்க விரும்பினால் நானும் ரெடிதான் என்பதுபோல் காட்டியது.

அதை அவன் புரிந்து கொண்டாலும் அவள் மீது கொண்ட காதல் மிகுதியால் நீ முத்தத்திற்கே மறுப்பதைப் பார்த்தால் என்னை நம்பவில்லைபோல் தெரிகிறது என்றான். உடனே அவள் நான் உங்களை நம்புகிறேன் என்பதை என் உடலைத் தந்து தான் நிரூபிக்க வேண்டும் என்றால் அதற்கும் தயார் என்றபடி அவன் சற்றும் எதிர்பாராத விதமாகத் தன் கைப்பையைத் திறந்து ஒரு ஆணுறையை எடுத்து அவனிடம் நீட்டினாள். நீங்கள் ஆண் சந்தோசமாக இருந்துவிட்டுப் போய்விடுவீர்கள். நான் உங்களுக்குரியவள்தான் என்றாலும் எனக்குப் பாதுகாப்பு வேண்டும் அல்லவா? என்றாள். அந்த அழகு தேவதை இவ்வளவு சீக்கிரத்தில் படிந்து விடுவாள் என்று அவன் எதிர்பார்க்கவேயில்லை.

அன்று இப்படி மகிழ்ச்சியாகக் கூடிக் கலந்த கதையைத் தன் நண்பனிடம் இளைஞன் விளக்க அவன் சிறிது நேரம் யோசித்துவிட்டுத் தனது இன்னொரு நண்பனுக்குப் போன் போட்டு சில அங்க அடையாளங்களைக் கேட்டறிந்தான். பின்பு இவனிடம் டேய் அவா பக்கா பிராடு பார்ட்டியான்டா! பைக்குள் எப்பவும் காண்டம் வைச்சிருப்பாளாம். அவள் நோக்கம் என்னென்னே தெரியாம நிறையப் பேர் அவளை ஒரேயொரு நாள் மட்டும் அனுபவிச்சிட்டு அவா ஆசையிலே அலை பாய்கிறான்களாம். நீயும் மாட்டிக்கிட்டியா என்று கூறி எச்சரித்திருக்கிறான்.

மறுமுறை அவளைச் சந்தித்தபோது இவன் அவள் கைப்பையைத் திறந்து அதிர்ந்து போயிருக்கிறான். ஆணுறைகளை நிறைய ஸ்டாக் வைத்திருக்கிறாள். அவன் தன் கைப்பையை ஆராய்வதைக் கண்டுகொண்ட அவள் உனக்கும் எனக்குமான தொடர்பு இத்தோடு முடிஞ்சுபோச்சு. இனிமேல் என்னைப் பார்க்கவோ,பேசவோ முயற்சிக்காதே. மீறினால் தொலைச்சுப்புடுவேன். என்னை ஒரு தேவதையாகத்தான் உனக்குத் தெரியும். எனக்குள்ளே ஒரு ராட்சசி இருப்பது உனக்குத் தெரியாது என்று மிரட்டிவிட்டுச் சென்றிருக்கிறாள்.

ஆனாலும் ஆசை அடங்காத அந்த இளைஞன் கல்யாண ஆசையோடு அவ்ளை செல் போனில் தொடர்புகொண்டு சந்திக்கலாமா? சந்திக்கலாமா? என்று கேட்டு தொந்தரவு செய்திருக்கிறான். சரி என்று கூறி குறிப்பிட்ட இடத்திற்கு வரச் சொல்லியிருக்கிறாள். இவனும் சென்றிருக்கிறான்.

அதன் பிறகு அரங்கேறியது அத்தனையும் கொடூரம். அவர் ஏற்பாடு செய்து வைத்திருந்த அடியாட்கள் சிலர் இவனைப் பிரித்து மேய்ந்துவிட்டார்கள். இப்போது எச்சரித்த நண்பன் தூக்கிக்கொண்டு போய் ஆஸ்பத்திரியில் வைத்து கவனித்துக் கொண்டிருக்கிறான். அவளோ இன்னொருவன் இன்னொருவன் என்று புதிய புதிய இளைஞர்களோடு பழகிக் கொண்டிருக்கிறாள்.

பழகிய ஒன்றிரண்டு நாளில் படுக்கை வரை வந்து விடுகிறாள். பணமும் கேட்பதில்லை. திருமணம் செய்துகொள் என்று கட்டாயப்படுத்துவதும் இல்லை. அப்படியே பிரிந்துபோய்விடுகிறாள். நாம் அவளுடனான உறவைப் புதுப்பிக்கக் கட்டாயப்படுத்தினால் மட்டும் இப்படி ஆள் வைத்து நையப்புடைத்து விடுகிறாள். எதை எதிர்பார்க்கிறாள் என்றே தெரியவில்லை. இனி அவள் இருக்கிற பக்கம் கூட எட்டிப் பார்க்க மாட்டேன் என்கிறான் இந்த இளைஞன் ஆஸ்பத்திரியில் படுத்துக் கொண்டு!

இப்படியும் ஒரு சில பெண்கள் உறைகளோடு உலாவுகிறார்கள். கை,கால்கள் உடைந்து போகாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Saturday மெயில் 100 ஆவது இதழ்

# போர் நடந்தது - பெண்ணுக்கா? மண்ணுக்கா?

முனைவர் அ.செல்வராசு

பெண்களைக் காரணமாக வைத்து ஒரு நாட்டின் மீது போர் தொடுத்த நிகழ்வை சங்க இலக்கியத்தில் காணமுடிகிறது. புறநானூற்றில் இடம்பெற்றுள்ள 19 பாடல்கள் வீரர் குடியைச் சேர்ந்தோரிடம் பெண்கேட்டு போர் தொடுக்கும் வேந்தர்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. அப்பாடல்கள் அனைத்திலும் 'பெண் கொடுக்க மறுக்கும்' வீரர் குடியினரைத்தான் காண முடிகிறது. புறநானூற்றில் உள்ள 'மகட்பாற்கிளவி' என்னும் துறை மேற்சுட்டிய பொருளுடைய பாடல்களாக உள்ளன. இத்துறைக்குரிய பாடல்களாக 19 பாடல்கள் உள்ளன. சான்றுக்கு ஒரு பாடல்.

**'வேட்ட வேந்தனும் வெஞ்சினத் தினனே**
**கடவன கழிப்பு இவள் தந்தையும் செய்யான்**
**ஒளிறுமுகத்து ஏந்திய வீங்குதொடி மருப்பின்**
**களிறும் கடிமரம் சேரா, சேர்ந்த**
**ஒளிறுவேல் மறவரும் வாய்மூழ்த் தனரே**
**இயவரும் அறியாப் பல்லியம் கறங்க,**
**அன்னோ பெரும் பேதுற்றன்று,**
**இவ்வருங்கடி மூதூர்**
**அறன் இலன் மன்றத்தானே- விறன்மலை**
**வேங்கை வெற்பின் விரிந்த கோங்கின்**
**முகைவனப்பு ஏந்திய முற்றா இளமுலைத்**
**தகை வளர்ந்து எடுத்த நகையொடு**
**பகைவளர்ந்து இருந்த இப்பண்பு இல்தாயே!'**
**(புறம்: 336)**

'பெண் கேட்டு வந்த வேந்தனும் வெஞ்சினத்தினன். இவள் தந்தையும் குறிப்பிட்ட காலத்தில் செய்ய வேண்டியதைச் செய்யவில்லை.யானைகளும் சீறி நிற்கின்றன. போர் மறவர்களும் சீறி நிற்கின்றனர்.பல்வேறு இசை கருவிகளின் ஒலி கேட்கும் இந்த நகரில் இப்போது கலகக் குரல்தான் கேட்கிறது. இவள் தாய், மகனை வளர்த்ததோடு மட்டுமல்லாமல் பகையையும் சேர்த்தே வளர்த்துவிட்டாள். அவள் பண்பும் அறனும் இல்லாதவள்' என்பதே மேற்கண்ட பாடலுக்கான பொருள்.

பிற 'மகட்பாற்காஞ்சி' பாடல்கள் அனைத்தும் ஏறக்குறைய இதே கருத்தைத்தான் கொண்டுள்ளன. இப்பாடல்களில் வேந்தர்கள் குறிப்புகள் காணப்படுகின்றன என்றாலும், அவர்களது நோக்கம் பெண்ணை திருமணம் செய்து கொள்வதன்று. மாறாக, வீரக்குடியினர் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியைக் கைப்பற்றுவதேயாகும். பெண் கேட்டுப் போரெடுத்துச் சென்று வெற்றிபெற்ற பிறகு, யாருக்காகப் போரெடுத்துச் சென்றனரோ அந்தப் பெண்ணைத் திருமணம் புரிந்து கொண்டதாகச் சான்றுகள் இல்லை.

மகட்கொடை வேண்டி பாரியின் மீது மூவேந்தர்களும் போர் தொடுத்து,பாரி பெண் தர மறுக்கவே, அவனை மூவேந்தர்களும் கொன்றுவிடுகின்றனர். மூவேந்தர்களும் பாரி மகளுக்காகத் தான் போர் தொடுத்தனர் என்றால், பாரியைக் கொன்ற பிறகு பாரி மகளிரை மூவேந்தர்களுள் யாராவது ஒருவர் திருமணம் புரிந்து கொண்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு நிகழவில்லை.

பெண் கேட்டுப்போர் தொடுத்த மூவேந்தர்களின் நோக்கம் பாரியின் நாட்டைக் கைப்பற்றுவதாகவே இருந்துள்ளது. பெண் கேட்டல் என்பது மறைமுகமாக நாட்டைக் கேட்டல் என்பதாகவே உள்ளது. போர் தொடுப்பதற்குப் பெண்ணைக் காரணம் காட்டியுள்ளனர். பெண் கேட்டு நாட்டைக் கைப்பற்றியது போன்றே, பிறகு நாட்டைக் கைப்பற்றியவுடன் அந்நாட்டுப் பெண்களையும் கவர்ந்துள்ளனர். ஆக, பெண் கேட்டுப் போர் தொடுக்கிறோம் என்ற பெயரில் நாட்டைக் கைப்பற்றுவதையே அக்கால வேந்தர்கள் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர் என்பது இதன் மூலம் அறிய முடிகிறது.

## இலக்கிய சுவை...

# பாடினியின் வடிவழகு!

வ.கோபால்ராசு

கரிகாற்பெருவளத்தானின் சிறப்புகளை 248 அடிகளில் விரிக்கும் நூல் பொருநராற்றுப் படை. ஆற்றுப்படை என்பது ஒரு வள்ளலிடம் பரிசில் பெற்றுத்திரும்பும் ஒரு புலவன், எதிர்ப்பட்ட வேறொரு புலவனை தான் பரிசில் பெற்ற தலைவனின் இயல்பு, கொடை முதலியவற்றைக் கூறி அவனிடம் சென்று பரிசில் பெறுமாறு ஆற்றுப்படுத்துவது ஆகும்.

அந்த வகையில் கரிகாலனிடம் பரிசில் பெற்றுத் திரும்பும் பொருநன் ஒருவன் பரிசில் நாடிவரும் பிறிதொரு பொருநனை கரிகால் பெருவளத்தானிடம் செல்லுமாறு ஆற்றுப்படுத்துகிறான். இந்நூலின் ஆசிரியர் முடத்தாமக்கண்ணியார். இவரை பெண்பாற் புலவர் என்று ஒரு சிலரும் ,இவர் ஆண்பாற் புலவர் தான் என்று ஒரு சிலரும் கூறுவர். இவர் சிறந்த இசை ஞானம் உள்ளவர். தமிழர்களின் பழைமையான சிறந்த இசைக்கருவியான யாழ் குறித்து தம்முடைய பாடல்களில் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். பாடினியின் வடிவழகு குறித்து இவர் பாடலைப் படித்தால் தற்கால திரையிசைப் பாடல்கள் எவ்வளவு தாழ்ந்துள்ளன என்பதை அறிந்துகொள்ள முடியும்.

பெற்ற தாய்க்கும் பிள்ளைக்கும் உயிர் தொடர்பாக இருந்து வரும் கொப்பூழ் குறித்து இப்பாடலில் எவ்வளவு நயமாய் உவமைப்படுத்தியிருக்கிறார் புலவர். அது மட்டுமல்ல ஒரு பெண்ணை எவ்வளவு நளினமாக விரசமில்லாமல் அழகுற வர்ணிக்க வேண்டுமோ, அப்படி வர்ணித்துச் செல்கிறது அப்பாடல். பாடினியின் வடிவு குறித்து அப்பாடல் இதோ!

**'வாரியும் வடித்தும் உந்தியும் உறழ்ந்தும்**
**சீருடை நன்மொழி நீரொடு சிதறி**
**அறல் போல் கூந்தல் பிறை போல் திரு நுதல்**
**கொலை வில் புருவத்து, கொழுங்கடை மழைக்கண்**
**இலவு இதழ் புரையும் இன்மொழித் துவர்வாய்**
**பல உறு முத்தின் பழிதீர் வெண்பல்**
**மயிர் குறை கருவி மாண் கடை அன்ன**
**பூங்குழை ஊசற் பொறை சால் காதின்**
**நாண் அடச்சாய்ந்த நலம் கிளர் எருதின்**
**ஆடு அமைப்பணைத் தோள் அரிமயிர் முன்கை**
**நெடுவரை ஒப்பின் ஒளி விடு வள் உகிர்**
**அணங்கு என உருத்த அணங்கு அணி ஆகத்து**
**ஈர்க்கு இடை போகா ஏர் இள வனமுலை**
**நீர்ப் பெயர்ச் சுழியின் நிறைந்த கொப்பூழ்**
**உண்டென உணரா உயவும் நடுவின்**
**வண்டு இருப்ப அன்ன பல் காழ் அல்குல்'**

இப்பாடினியின் வடிவழகை வர்ணித்துச் சொல்லும் பாடலில் பாடினியின் பாதத்தின் அழகை

'வருந்து நாய் நாவின் வருந்தகு சீறடி' என்று வர்ணிக்கிறார்.

இப்பாடலின் பொருள் எண்ணி எண்ணி சுவைக்கத்தக்கது.

பாட்டிசைக்கும் பாடினி அழகுறப் பாடினாள். அவள் புது வெள்ளம் ஓடி வந்த ஆற்றில் நெளி நெளியாகப் படிந்து கிடக்கும் திட்டைப்போன்ற அழகிய கூந்தலை உடையவள். ஒளி உமிழும் அழகிய பிறைபோன்ற நெற்றியை உடையவள். கூர்மையான அம்பை உடைய வில்லைப் போன்ற விழிகளால் ஆடவரைக் கொல்லும்படியான விழியழகை உடையவள். இலவமலர் போன்ற இதழ்களை உடையவள். சிவந்து கிடக்கும் இதழ்களிடையே முத்துப்போன்ற பற்களை உடையவள். மயிர் வெட்டும் கத்திரியின் கைப்பிடி போன்ற அவள் அழகிய காதில் மரகதக் குழைகள் ஒளிரும். வெட்கத்தால் கவிழ்ந்து கிடக்கிற கழுத்து, அடையும் மூங்கில் போன்ற தோள், முன்கையில் படிந்த அழகான மயிரொழுங்கு, பெரிய மலை உச்சியிலுள்ள காந்தள் மலர் போன்ற விரல், கிளியின் வாய்போன்ற ஒளிவிடும் நகம், பார்த்தவர் மனம் துளைக்கும் பொன்னிற கொங்கைகள், நீரிடத்துத் தோன்றும் சுழிபோன்ற இலக்கணம் பொருந்திய கொப்பூழ், உண்டென்று பிறரால் உணர இயலாது வருந்துகின்ற இடை இப்படியே கேட்டவர் மலைக்கும் வண்ணம் அழகுற வர்ணித்த படியே பாடினியின் அழகை பாடல் வர்ணித்துச் செல்கிறது.

பாடினியின் பாதத்தின் அழகை வர்ணிக்கும் போது உவமையின் உச்சத்துக்கே சென்றுவிடுகிறார் புலவர். உவமைக் கெல்லாம் பெருமை சேர்க்கும் வண்ணம் ஓடி ஓடி இளைத்த நாயின் நாக்கு போன்று சிவந்த, நீண்ட வடிவு கொண்டு விளங்குகிறது என்று வர்ணித்துச் செல்கிறார்.சங்கத் தமிழ்ப் பாடல்கள் எப்போது படித்தாலும் தேனாய் இனிக்கிறதே...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணைக் கூசும் சூரிய ஒளி



காலையிலும் மாலையிலும் எளிதாக நாம் சூரிய ஒளியை பார்க்கலாம்.ஆனால் மதிய வேளையில் உச்சி வெய்யில் அடிக்கும் போது சூரியனைப் பார்த்தால் கண்ணைக் கூசச் செய்து விடும். இதற்கு என்ன காரணம் தெரியுமா?

பூமியைச் சுற்றிலும் உள்ள வளிமண்டலத்தில் ஓட்சிஜன், நைட்ரஜன் உட்பட பல வாயுகளும் தூசி போன்றவை அடங்கியுள்ளன. காலையிலும் மாலையிலும் சூரிய ஒளி இந்த வளிமண்டலத்தைக் கடந்து வரும் தூரம் அதிகமாக உள்ளது. அதனால் சூரிய ஒளி பலவறாக சிதறடிக்கப்படுகிறது.ஓரேஞ்வா,சிவப்பு நிற ஒளிகள் மட்டும் அதிகமாக சிதறுவதில்லை. பொதுவாக வளிமண்டலம்,சூரிய ஒளியில் இருந்து வரும் ஓரேஞ்ச் நிறத்தை மட்டுமே பூமிக்கு அனுப்புகிறது. ஆனால் மதிய வேளையில் சூரியன் தலை உச்சிக்கு வரும்போது,சூரியனுக்கும் இந்த காற்று மண்டலத்துக்கும் இடையே உள்ள தூரம் குறைவாகிறது. அதனால் நம்மால் அந்த நேரத்தில் சூரியனை நேரடியாக பார்க்க முடிவதில்லை.




## ஆன்டிபயாட்டிக் என்றால் என்ன?



பென்சிலினைக் கண்டறிந்தவர் அலெக்சாண்டர் பிளமிங். இவர் ஒரு பிரிட்டிஷ் விஞ்ஞானி. இவர் 1928 இல் முதன் முதலில் உயிருக்கு எதிரி என்ற கருத்தில் 'ஆன்டிபயாட்டிக்' என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். தனது ஆராச்சிக் கூடத்தில், கிருமிகள் கண்ணாடிக் கிண்ணங்களில் எவ்வாறு வளர்கின்றன என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டுக்கொண்டிந்தார். அப்போது ஒரு கிண்ணத்தில் தானாக வளர்ந்திருந்த பூஞ்சையின் சுரப்பு நீர் மற்ற உயிரினங்களை அழித்துக் கொண்டிருப்தைக் கண்டார். கிண்ணத்தில் தானாக வளர்ந்த பூஞ்சையில் பெயர், பெனிசிலியம் நொட்டோட்டம். இறந்து கொண்டிருந்த உயிரியின் பெயர், ஸ்டபைலோ கொக்கஸ் என்ற பாக்டீரியா. பூஞ்சையில் இருந்து சுரந்த பென்சிலின் என்ற வேதிப் பொருள்தான். பாக்டீரியாவை அழித்துக் கொண்டிருந்தது. இதைக் கண்டுகொண்டு, ஹாவர்டு புளோரி, எர்ன்ஸ்ட் செயின் என்ற இருவரும் 1940 இல் பென்சிலினைத் தனிமைப்படுத்தி ஊசி மூலம் மருந்தாகப் பயன்படுத்தும் முறையைக் கண்டுபிடித்தனர். இதற்காகவே இவர்கள் இருவருக்கும் பிளமிங்குடன் சேர்த்து 1945இல் நோபல் பரிசு வழங்கப்பட்டது.

## தெரிந்துகொள்ளுங்கள்

★ சூரியன் மறையும்போது வானம் சிவப்பு,ஓரேஞ்சு நிறத்தில் காணப்படுவதற்கு காரணம், சூரியன் ஓரேஞ்ச்,சிவப்பு நிற ஒளியை உமிழ்வதுதான்.

★ பாலில் உள்ளதைவிட கல்சியம் மிகுதியாக உள்ள காய்கறி,வெங்காயம்.

★ பற்களில் உள்ள துவாரங்களை அடைக்கப் பயன்படுவது வெள்ளி இரசக்கலவை.

★ உலகில் முதன்முதலில் உயில் எழுதும் பழக்கத்தை ஆரம்பித்தவர்கள் ரோமானியர்கள்.

★ தாக்களியை முதன் முதலில் பயிர் செய்தவர்கள் அயர்லாந்து நாட்டுக்காரர்கள்.

★ தொற்றுநோய் பரவாமல் தடுக்கும் தாது உப்பு துத்த நாகம்.

## குறுக்கெழுத்துப்போட்டி - 100

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | ♠ | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | ♠ |
| 17 | 18 | 19 | ♠ | 20 | 21 |
| 22 | ♠ | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | ♠ | ♠ | 29 | 30 |

**இடமிருந்து வலம்**

1. நட்பு, உறவு
7. காரம், உவர்ப்புத் தன்மை (குழம்பியுள்ளது)
12. ஏளனப் பேச்சு, வஞ்சகம் (குழம்பியுள்ளது)
17. மறுமொழி, விடை (குழம்பியுள்ளது)
20. வீடு கட்டுவதற்கு தேவையான மூலப்பொருள்
23. கொடுமை, இரக்கமற்ற தன்மை (குழம்பியுள்ளது)
27. அனுமான் ஜெபிக்கும் மந்திரம் (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. வரலாறு
2. இருள், இடைச்சாமம் (குழம்பியுள்ளது)
3. பராமரிப்பு நிலையம் (குழம்பியுள்ளது)
4. அறிவு, திறன் (குழம்பியுள்ளது)
6. தன்மைப் பன்மை (தலைகீழ்)
16. நேர்த்திக்கடனுக்காக எடுக்கப்படும் பூங்குடம் (குழம்பியுள்ளது)
21. சிறு செடி வகை (தலைகீழ்)

பெயர் : ..............................................................................

முகவரி : ..............................................................................

..............................................................................

### குறுக்கெழுத்துப்போட்டி - 98 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. தாமிரபரணி | 1. தாற்பரியம் |
| 7. கற்கடகம் | 2. மிருகம் |
| 13. பரு | 3. கர |
| 15. தம் | 4. பரதம் |
| 17. கரிகரம் | 5. கடரம் |
| 25. திகம்பரன் | 6. கணி |
| | 19. கத்தி |
| | 24. படி |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

ஜூலியானா செபஸ்ரியாம்பிள்ளை,
இல. 32, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.


### பாராட்டுப் பெறுவோர்

01. திருமதி ஆர்.சிவஞானம்,
இல. 43/1, புகையிரத வீதி,
மட்டக்களப்பு.
02. எம்.என்.இளங்கோவன்,
பிரதான வீதி,
பதுளை.
03. எம்.ஏ.ஜெரீஸா,
தில்லையடி.
04. என்.பிரேம்குமார்,
வெள்ளவத்தை.
05. கே.அரசேஸ்வரன்,
கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு.

உங்கள் விடைகளை
Saturday மெயில்
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையத்தில் இணையும் இளைய தலைமுறை




திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்பது பழமொழி. இன்றைய காலகட்டத்தில் திருமணங்கள் இணையத்தளத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்பதே உண்மை.

இணையத்தள திருமண தகவல் சேவை மையங்கள் இன்றைய தலைமுறையினருக்கு வரப்பிரசாதமாக உள்ளன. ஊர் ஊராக வரன் தேடி அலைவதைவிட உட்கார்ந்த இடத்திலேயே ஆயிரக் கணக்கான வரன்களின் தகவல்கள் கிடைப்பதால் இளைய தலைமுறையினர் தங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தள திருமணத் தகவல் மையங்கள் மூலம் தேர்ந்தெடுக்கின்றனர்.

பத்தாண்டுகளுக்கும் மேலாகத் திருமணத் தகவல்மையம் நடத்தி வெற்றி பெற்றுள்ள இந்தியாவின் பாரத மேட்ரிமோனி,கல்யாணமாலை மேட்ரிமோனி ஆகிய திருமணத் தகவல் மைய நிறுவனங்கள் தங்களின் அனுபவத்தையும் வெற்றியின் இரகசியத்தையும் பகிர்ந்து கொள்கின்றனர்.

**இளைய தலைமுறையின் எதிர்பார்ப்பு:**

தொழில்நுட்பங்கள் வளர்ச்சியடைந்துள்ளதால் இளைய தலைமுறையினருக்கு வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பதில் இணையத்தளம் ஒன்லைன் திருமணத் தகவல் மையங்கள் அதிகளவில் உதவி புரிகின்றன. திருமணத்திற்கு துணையைத் தேடும் பெரும்பாலான இந்தியர்கள் ஒரே சமுகத்தைச் சேர்ந்தவர்களையே அதிகம் விரும்புகின்றனர். மதம், ஜாதி,வயது, இருப்பிடம், உயரம்,கல்வித் தகுதி,வேலை ஆகிய அடிப்படை அம்சங்களுடன் கூடிய துணையைத் தேடுவதாகவும் பாரத் மேட்ரிமோனி இணையத்தள திருமணத் தகவல் மையத்தின் நிறுவனர் முருகவேல் ஜானகிராமன் தெரிவித்துள்ளார்.







கிராமமோ, நகர்ப்புறமோ, எந்தப் பகுதியில் வசிக்கும் மணமகனோ, மணமகளோ இருவரின் எதிர்பார்ப்புமே ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. இன்றைய இளைஞர்கள் ஒத்த கருத்துடைய துணையைத் தான் அதிகம் தேடுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அவர்களின் பொழுது போக்கு, ஆர்வம் போன்ற பரஸ்பர விருப்பத்திற்கு ஏற்ப தேடலுக்கு உதவி புரிவதாகவும் முருகவேல் கூறியுள்ளார்.

**விவாகரத்தானவர்களுக்கு புதிய வாழ்க்கை**

வரன் தேர்வில் மதம், ஜாதி, வயது, இருப்பிடம்,உயரம்,கல்வி மற்றும் வேலை போன்றவை முக்கிய பங்கு வகிக்கின்றன. ஒரு சிலர் இருப்பிடத்தைப் பொருட்படுத்துவதில்லை என்றும் கூறியுள்ளார். விவாகரத்து செய்து கொண்டவர்களுக்காகச் செயல்படும் விவாகரத்து திருமணத் தகவல் மையம் புரட்சிகரமான சேவையைச் செய்து வருவதாகத் தெரிவித்தார். சரிப்பட்டு வராத பழைய வாழ்க்கையை முறித்துக் கொண்டவர்களுக்குப் புதிய வாழ்க்கையைத் தொடங்க விவாகரத்து திருமண மையம் சிறந்த வழிகாட்டியாக உள்ளதாகவும் ஜானகிராமன் கூறியுள்ளார்.

**புறநகருக்கு குடிபெயரும் தம்பதியர்**

சென்னையை தலைமையிடமாகக் கொண்ட பிரசித்தி பெற்ற கல்யாணமாலை திருமணத் தகவல் மையத்தின் நிறுவனர் வெங்கடேசன் வித்தியாசமான கருத்தை முன் வைக்கிறார். நகர்ப்புறங்களில் இருந்து மட்டுமே மணமகன் மற்றும் மணமகளைத் தேர்வு செய்வதாகக் கூறியுள்ளார். ஆனால், 95 சதவிகித மணமக்கள் திருமணத்திற்குப் பின்னர் சென்னை அல்லது பெங்களூரின் புறநகர்ப் பகுதிக்கு குடிபெயர்வதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். தவிர்க்க முடியாத பட்சத்தில் ஒரு சிலர் மட்டுமே புறநகர்ப் பகுதியில் வசிப்பவர்களைத் திருமணம் செய்து கொள்ளத் தேர்வு செய்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

பலதரப்பட்ட தளங்களில் செயல்படுவதே தங்களின் வெற்றியின் இரகசியம் என்கிறார் கே.எம்.எம். வெங்கடேசன். இணையத்தளங்கள், பருவஇதழ்கள்,தொலைக்காட்சிகளுடன் இணைந்து புதிய முறையில் செயல்படுவதன் மூலம் அதிக அளவில் சேவை செய்ய முடிவதாக அவர் கூறியுள்ளார். தொலைக்காட்சி, இணையத்தளம், செல்போன் போன்றவற்றின் மூலம் சந்தித்துக் கொண்ட மணமகளோ, மணமகனோ வெற்றிகரமாக திருமணம் முடிந்து வாழ்வைத் தொடங்கியுள்ளதாகத் தெரிவித்தார்.

**சேவைகள் பலவிதம்**

இரண்டு குடும்பங்களைப் பிரத்தியேகமாகச் சந்திக்க வைப்பதும் பல தரப்பட்ட சமுகத்தைச் சேர்ந்த வரன்களை அவர்களின் பெற்றோருடன் ஒரு கூரையின் கீழ் சந்திக்க வைப்பதும் தங்களின் சிறப்பம்சம் என்று வெங்கடேசன் கூறியுள்ளார். மேலும்,சாதி வாரியாக நிகழ்ச்சிகளை நடத்த முடிவு செய்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

விதவைகளுக்கும் மாற்றுத் திறனாளி மணமகளுக்கும் இலவச சேவை புரிவதாகவும் இதுவரை 300 இற்கும் மேற்பட்ட விதவைப் பெண்களுக்கு புதுவாழ்வை அமைத்துத் தந்திருப்பதாக வெங்கடேசன் கூறியுள்ளார்.

இதுவரை தமிழர்களுக்கு மட்டுமே சேவை செய்து வந்த தங்களின் திருமணத் தகவல் மையம் இனி சகல மொழி பேசுபவர்களுக்கும் விரிவுபடுத்தவுள்ளதாகவும் வெங்கடேசன் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஜலின் ஆபாசமும் தங்கையின் மறுப்பும்




பிரபல எவ்.எச்.எம்.நாளிதழுக்கு அரை நிர்வாண போஸ் கொடுத்து அனைவரையும் அதிர வைத்தும் பல்வேறு கண்டன விமர்சனங்களுக்கும் உள்ளாகியுள்ள காஜல் அகர்வால், அப்படியொரு போஸ் கொடுக்கவே இல்லை என்று அவரது தங்கை நிஷா அகர்வால் கூறியுள்ளார். தமிழில் பழனி, சரோஜா, நான் மகான் அல்ல உள்ளிட்ட பல்வேறு படங்களில் நடித்தவர் காஜல் அகர்வால். தெலுங்கில் நிறையப் படங்களில் நடித்து கல்லா கட்டியுள்ளார். சமீபத்தில் ஹிந்தி சிங்கம் மூலம் பொலிவூட்டிலும் காலடி எடுத்து வைத்தார். தென்னிந்திய நடிகையாக இருந்த வரைக்கும் நான் எப்போதும் கவர்ச்சி காட்டமாட்டேன். கவர்ச்சி எல்லாம் நமக்கு ஒத்து வராது. நீச்சல் உடை கூட அணிந்து நடிக்க மாட்டேன் என்று ஏகபோக வசனம் பேசி வந்த காஜல், இப்போது துணிச்சலாக மேலாடையின்றி அரைநிர்வாண போஸ் கொடுத்து அதிரவைத்துள்ளார். பிரபல எவ்.எச்.எம். பத்திரிகைக்காக மேலாடை எதுவுமின்றி, கைகளை மறைத்தபடி இப்படி போஸ் கொடுத்துள்ளார். காஜலின் இந்தக் கவர்ச்சிப் படம் பல்வேறு விமர்சனத்தைக் கிளப்பியுள்ளது. பொலிவூட்டில் வாய்ப்புகளைப் பிடிக்கவே இந்தக் குறுக்கு வழியை அவர் கையாண்டிருப்பதாக பொலிவூட் பத்திரிகைகள் கிண்டலடித்துள்ளன. அதேநேரம் இந்த விவகாரத்தைக் கேள்விப்பட்ட தமிழ் மற்றும் தெலுங்கு சினிமா நட்சத்திரங்கள் பலரும் அதிருப்தி தெரிவித்துள்ளனர். இந்நிலையில், காஜலின் இந்த ஆபாசப் படம் போலியானது என்று அவரது தங்கை நிஷா அகர்வால் கூறியுள்ளார். இது குறித்து நிஷா அகர்வால் கூறுகையில்;

அக்கா இப்படியொரு காட்சிக்குப் போஸ் கொடுக்கவே இல்லை. அவரது படத்தை மார்பிங் செய்து ஆபாசமாக வெளியிட்டுள்ளனர். அக்காவின் பெயரைக் கெடுக்கவும் மலிவான விளம்பரம் தேடவும் இப்படியொரு செயலில் ஈடுபட்டுள்ளனர். அக்காவின் இந்த படத்தைப் பார்த்து நண்பர்கள் முதல் உறவினர்கள் வரை போன் செய்து பேசுகின்றனர். இதனால் அக்கா காஜல் அகர்வால் மிகவும் மனம் உடைந்து போயுள்ளார். அக்கா மட்டுமன்றி எனது குடும்பமும் வருத்தத்தில் உள்ளனர். இது குறித்து சட்ட ரீதியாக நடவடிக்கையெடுப்பது குறித்து ஆலோசித்து வருகிறோம் என்று கூறியுள்ளார்.

ஏற்கனவே, நான் மும்பைக்காரி. என்னைத் தென்னிந்திய நடிகை என்று அழைக்காதீர்கள் என்று பேசி வாங்கிக் கட்டிக்கொண்டு பின்னர் அதற்கு மறுப்புத் தெரிவித்த காஜல் இப்போது இந்த ஆபாசப்படம் வெளிவந்து இரண்டு,மூன்று நாட்களாகியும் இதுபற்றி எந்தவொரு கருத்தையும் தெரிவிக்காமல் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

Saturday சினிமா

## போட்டிக்கு கவர்ச்சி அவசியம் – தீபிகா



போட்டியை சமாளிப்பதற்குக் கவர்ச்சியாக நடிக்க வேண்டியிருக்கிறது என்று நடிகை தீபிகா படுகோனே கூறியிருக்கிறார். பொலிவூட் முன்னணி நடிகையான தீபிகா அளித்துள்ள பேட்டியில் தான் எனது குடும்பத்தாரால் கட்டுப்பாட்டுடனும் கண்ணியத்துடன் வளர்க்கப்பட்டிருப்பதாகக் கூறியிருக்கிறார். கவர்ச்சி குறித்த கேள்விக்குப் பதில் அளித்திருக்கும் தீபிகா படுகோனே மற்றவரைக் கவரும் காந்தப் பார்வையையும் கவர்ச்சி அழகையும் ஒரு நடிகை நிச்சயம் பெற்றிருக்க வேண்டும் என்பது கட்டாயமில்லை. ஆனால் போட்டி மிகுந்த திரையுலகில் நீடித்து நிலைத்து நிற்கப் போட்டிகளைச் சமாளிக்க மற்ற நடிகைகளை விட சற்றுக்கூடுதலான அழகும் கவர்ச்சியும் தேவை. அதனால்தான் கவர்ச்சியாக நடிக்க வேண்டிய கட்டாயத்திற்கு நடிகைகள் தள்ளப்படுகிறார்கள். ஆனாலும் ரசிகர்கள் எனது அழகைப் பாராட்டுவதை விட எனது நடிப்பைப் பாராட்டுவதையே விரும்புகிறேன் என்று தெரிவித்திருக்கிறார்.

அமீர்கான் தயாரிப்பில் இம்ரான் கான் நடித்திருந்த டில்லி பெல்லி ஹிந்திப் படத்தை தமிழில் ரீமேக் செய்யும் முயற்சிகள் நடக்கின்றன. ஹிந்தியில் வெளியான பரீசோதனை முயற்சிகளில் டில்லி பெல்லியும் ஒன்று. படம் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றது. இந்தப் படத்தை தமிழில் எடுக்க முயற்சிகள் நடக்கின்றன. இம்ரான் கான் நடித்த வேடத்தில் சிம்பு நடிப்பார் எனவும் சொல்லப்படுகிறது. ஏற்கனவே தபாங் இந்திப் படத்தின் தமிழ் ரீமேக்கில் சிம்பு நடித்து வருவது குறிப்பிடத்தக்கது.

## அஜித் ரசிகையான பியா



அஜித்தின் நடிப்பில் மயங்கிய நடிகை பியா அஜித்தான் உண்மையான சூப்பர் ஸ்டார் என்று கூறியிருக்கிறார். இதுவரை சல்மான்கானின் ரசிகையாக இருந்த அவர் இப்போது அஜித் ரசிகையாகி விட்டாராம். அஜித்துடன் ஏகன் படத்தில் 2 ஆவது நாயகியாக நடித்திருப்பவர் நடிகை பியா. கோவா படத்திலும் 2 ஆவது நாயகியாக வந்து தனது கலகலப்பான மற்றும் உருக்கமான நடிப்பால் ரசிகர்களைக் கவர்ந்து இழுத்தார்.இதுவரை தனக்கு மிகவும் பிடித்த நடிகர் சல்மான் கான் தான் என்று சொல்லி வந்த பியா, சமீபகாலமாக அஜித் என்னை ரொம்பவே கவர்ந்து விட்டார் என்று கூறி வருகிறார். எப்படியாவது அஜித்துடன் மீண்டும் ஒரு படத்தில் நடித்துவிட வேண்டும் எனத் துடிக்கும் நடிகைகள் பலரும் இப்படித்தான் சொல்லி வருகிறார்கள். அந்த வரிசையில் நீங்களும் அஜித்தைப் புகழ்ந்து தள்ளுகிறீர்களா? என்று கேட்டால் ஐயயோ... அப்படியெல்லாம் இல்லை. மங்காத்தா பார்த்தேன். ஒட்டுமொத்தப் படத்தையும் அஜித் தாங்கி நிறுத்தியுள்ளார். மனதைக் கவர்ந்து விட்டது அவரது நடிப்பு. அப்படியே உருகிப் போய்விட்டேன். அதனால்தான் அவரை உண்மையான சூப்பர் ஸ்டார் என்று சொன்னேன் எனப் பதில் வருகிறது. இது தொடர்பாக தனது டுவிட்டர் பக்கத்தில் எழுதியிருக்கும் பியா, ஸாரி சல்மான் கான். இப்போது நான் அஜித்தின் முழுமையான ரசிகையாகிவிட்டேன் என்றும் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Saturday மெயில் 100 ஆவது

# அரசியலில் விருப்பமில்லை

## – சிம்ரன்





அரசியலில் எனக்கு விருப்பம் இல்லை. அரசியலில் நுழையும் எண்ணமும் இல்லை என்று நடிகை சிம்ரன் கூறியுள்ளார். குஷ்புவின் கொச்சைத் தமிழில் சின்னத் திரையைக் கலக்கிய ஜெயா ரி.வி.யின் ஜாக்பொட் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கும் பொறுப்பை ஏற்றிருக்கிறார் சிம்ரன். குஷ்பு தி.மு.க. வில் இணைந்ததால் நிகழ்ச்சியில் இருந்து தூக்கப்பட்டு அவருக்குப் பதிலாக நதியா நியமிக்கப்பட்டார். ஆனால், ஏனோ... நதியா பாதியிலேயே மும்பைக்குப் பறந்து விட்டார். முந்தைய 2 பேரையும் விடத் தெளிவாகவும் கொஞ்சும் அழகுத் தமிழிலும் பேசி நிகழ்ச்சியை நடத்திப் பலரது பாராட்டுகளையும் பெறத் தொடங்கிவிட்டார் சிம்ரன். தான் நடத்தும் இந்த நிகழ்ச்சி ஜெயா ரி.வி.யின் டி..ஆர்.பி. ரேட்டிங்கை உயர்த்தியிருப்பதால் ஏக குஷியில் இருக்கும் சிம்ரனிடம் இதற்கு முன்பு இந்த நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கிய குஷ்பு அரசியலுக்குப் போய் விட்டார். நீங்கள் எப்படி? என்று கேட்டால் எனக்கு அரசியலில் விருப்பம் இல்லை. அரசியலில் நுழையும் எண்ணமும் எனக்கு இல்லவே இல்லை என்று கூறுகிறார் அம்மணி. இதற்கு முன்பு அ.தி.மு.க.வுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்தவர்தான் என்பது நினைவு கூரத்தக்கது.

ராம.நாராயணன் மிர்ச்சி சிவாவை வைத்து ஒரு படம் இயக்கினார். படத்தின் பெயர் சிவபூஜையில் கரடி. மலையாளத்தில் திலீப், கலாபவன் மணி நடித்த ஒரு படத்தையே முறையாக உரிமை வாங்கி சிவபூஜையில் கரடியாக்கினார். சத்தமில்லாமல் படத்தை எப்படி முடித்தாரோ அதே பாணியில் படமும் தொடங்குகிறது. ஆட்சி மாறியதும் முதலில் துண்டை உதறித் தோளில் போட்டு ஓட்டமெடுத்தவர் ராம.நாராயணன். இப்போதைக்கு வெளியே தலைகாட்டுவதே ஆபத்து. படத்தை எப்படி வெளியிடுவது என்று கரடியை இன்னும் கண்ணில் காட்டாமலே இருக்கிறார்.


## 'மலை'யைத் தேடும் அர்ஜுன்

ஏழுமலை,மருதமலை போன்ற படங்கள் நல்ல பெயரைப் பெற்றுத் தந்ததால் தான் நடிக்கும் புதிய படத்தின் தலைப்பில் மலை இருக்க வேண்டும் என நினைத்து மலையைத் தேடிக் கொண்டிருக்கிறாராம் ஆக்ஷன் கிங் அர்ஜுன். அப்பா வேடத்தில் நடிக்கும் அளவுக்கு வயது ஏறினாலும் பாட்டுப் பாடும் மூடில் கோடம்பாக்கத்தை வலம் வந்து கொண்டிருப்பவர்களில் முக்கியமானவர் நடிகர் அர்ஜுன். சமீபத்தில் வெளியான படத்தில் அஜித்துக்கு சரிசமமான வேடத்தில் நடித்து ரசிகர்கள் மனதில் நற்பெயர் எடுத்திருக்கும் அர்ஜுன் அடுத்த பட வேட்டையில் இறங்கியிருக்கிறார். தன்னைத் தேடி வாய்ப்புகள் வந்த நிலை மாறி தானே தேடிப் போய் வாய்ப்புக் கேட்கும் நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கும் அர்ஜுன் ஆஸ்கார் பிலிம்ஸ் நிறுவனத்தைத் தொடர்பு கொண்டிருக்கிறார். இதற்கு முன்பு இவரது நடிப்பில் ஏழுமலை, மருதமலை என்ற இரண்டு படங்களைத் தயாரித்திருக்கிறது அந்த நிறுவனம். அர்ஜுனே தேடி வந்து வாய்ப்புக் கேட்டதால் சரி என்று சம்மதித்தாராம் ஆஸ்கார் ரவிச்சந்திரன். இந்தப் படத்தை அர்ஜுனே இயக்கப் போகிறார். சென்டிமென்ட் படி ஏதாவது ஒரு மலை தலைப்பில் இருக்கட்டும் என்று கூறப்பட்டிருக்கிறதாம். அதனால் புதிய மலையைத் தேட ஆரம்பித்திருக்கிறாராம் ஆக்ஷன் கிங்.





ரீமாசென் டில்லி ஹோட்டல் அதிபர் ஷிவ்கரண் சிங்கை காதலிக்கிறார் என்று பல மாதங்கள் முன்பே ஊடகங்கள் எழுதின. இருவருக்தும் நிச்சயதார்த்தம் நடந்ததாகவும் சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. அப்போதெல்லாம் காதலாவது, கத்தரிக்காயாவது உங்களுக்த வேறு வேலை கிடையாதா என்று கோபப்பட்டு வந்தார் ரீமா சென். கத்தரிக்காய் இப்போது முற்றி விட்டது. ஷிவ்கரண் சிங்தும் நானும் நண்பர்களாகத்தான் பழகினோம். அது காதலாக மலர்ந்தது. எங்கள் காதலை இரு வீட்டாரும் அங்கீகரித்துள்ளனர். அடுத்த வருடம் எங்கள் திருமணம் நடக்தும் என மனம் திறந்திருக்கிறார். நடிகைகள், தாங்கள் காதலிப்பதை ஊடகங்கள் அறிவித்த பிறகே தெரிந்துகொள்கிறார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரமிழக்கும் தமிழ் சினிமா





அண்மையில் வெளியான மிட்டாய் என்ற திரைப்படம் வெளியான முதல் மூன்று தினங்களில் சென்னையில் வசூலித்த தொகை 21,684 ரூபா. வார இறுதி நாட்களின் வசூல் இப்படியென்றால் வேலை நாட்களில் வசூல் எவ்வளவு இருக்கும் என்பதை சொல்லத் தேவையில்லை.இதைவிடக் குறைவான தொகை வசூலித்த படங்களும் இருக்கின்றன.இராமநாதபுரம் என்ற படம் இதைவிட மோசமான வசூலை பெற்றுள்ளது.

21,000 ரூபா என்பது ஒரு நாள் படப்பிடிப்பில் யூனிட்டின் உணவுத் தேவைக்குக்கூட ஆகாத பணம் அவ்வளவு குறைவு இந்த நிலைமையில் தான் இன்று பெருவாரியான திரைப்படங்கள் வசூல் செய்கின்றன.

இந்த வருடம் ஜூன் இறுதி வரை 61 திரைப்படங்கள் வெளியாயின.ஆகஸ்ட் இறுதியில் இந்த எண்ணிக்கை எண்பதைதொட்டிருக்கிறது.இதில் எத்தனை படங்கள் இலாபம் சம்பாதித்துள்ளன என்று கணக்கிட்டாலே திரையுலகின் இன்றைய நிலைமை தெரிந்துவிடும்.தயாரிப்பாளர்,விநியோகஸ்தர்,திரைய்ரங்கு உரிமையாளர் என்று மூன்று தரப்பினரும் இலாபம் அடைந்தால் மட்டுமே அப்படத்தை இலாபம் ஈட்டிய படமாக ஒப்புக்கொள்ள இயலும் இதில் ஒரு தரப்பு நஷ்டப்பட்டாலும் அது வசூல் ரீதியாக தோல்வியடைந்த படமே.



இந்த அடிப்படையில் இது வரை மூன்று திரைப்படங்கள் மட்டுமே வெற்றி பெற்றிருக்கின்றன.அவை ஸ்டூடியோ கிரீன் தயாரித்த சிறுத்தை,ஆர்.எஸ்.இன்ஃபோடெயின்மெண்டின் கோ லோரன்ஸின் காஞ்சனா. மற்றப் படங்கள் மேலே உள்ள மூன்று தரப்பில் ஒருவருக்கோ இல்லை.இருவருக்குகோ இல்லை மூவருக்கும் நஷ்டத்தை ஏற்படுத்தியவை. இதில் கவலை தரும் அம்சம் 90 சதவீத படங்கள் மூன்று தரப்பினருக்கும் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளன.

இந்த நஷ்டம் ஏன்?நடிகர்களின் அதிகப்படியான சம்பளம்,அதிகரித்து வரும் தயாரிப்பு செலவு,ரசிகர்கள் வேறு பொழுதுபோக்குக்கு திசை மாறியது,திருட்டு டிவிடி என்று பல காரணங்கள் கூறப்படுகின்றன.திரையுலகினர் இதில் ஒரு அம்சத்தை வசதியாக மறைத்துவிடுகின்றனர்.அது படங்களின் தரம்.



ஜனங்களுக்கு பிடித்தமான முறையில் படங்கள் இருந்தால் அவை மோசமான தோல்விகளை சந்திக்காது என்பதே வரலாறு.இதற்கு களவாணி சிறந்த உதாரணம்.சாதாரண காதல் கதைதான். ஆனால், அதை எடுத்திருந்த விதம் ரசிகர்களைக் கவர்ந்தது. கூட்டமாக திரையரங்குக்கு வந்து ரசித்தார்கள்.படம் வெற்றி பெற்றது.ஆனால் இன்று வெளியாகும் படங்கள் ரசிகர்களின் பொறுமையை சோதிப்பவையாகவே உள்ளன.

இரண்டு கோடிகள் இருந்தால் இன்று யாரும் படமெடுக்கலாம். புற்றீசல் போல தயாரிப்பாளர்கள் பல திசைகளிலிருந்தும் கிளம்பி வருகிறார்கள்.இதில் கவலை தரும் அம்சம் பணம் போடுகிறோம் என்ற கோதாவில் இவர்களே கதாநாயகர்களாகவும் இயங்குநர்களாகவும் மாறி விடுகிறார்கள்.லத்திகா டாக்டரிலிருந்து ராமர் நாயகன் வரை எல்லோருமே பணம் இருப்பதால் நாயகனானவர்கள். தமிழ் சினிமாவின் வெற்றி சதவீதத்தை இவர்கள் படுபாதாளத்துக்கு கொண்டு சென்றிருக்கிறார்கள்.

நல்ல சினிமா என்று அடையாளப்படுத்தப்பட்ட தெய்வத்திருமகள் படமும் பல இடங்களில் நஷ்டத்தை சந்தித்துள்ளது.இது போன்ற சோதனை முயற்சிப் படங்களின் பட்ஜெட் கட்டுக்குள் இருப்பது அவசியம்.நாயகன் மற்ற வர்த்தகப் படங்களுக்கு கிடைக்கும் சம்பளத்தில் பாதியையே எதிர்பார்க்க வேண்டும்.அப்படியிருந்தால் எந்தப் படமும் வெற்றிப்படமாகியிருக்கும்.

இந்த நஷ்டங்களை விட கவலைதரும் விடயம் ஆரண்யகாண்டம் படத்தின் தோல்வி. இந்த வருடம் தமிழில் வெளியான ஆகச் சிறந்த படமிது.உள்ளடக்கத்திலும் கதை சொன்ன விதத்திலும் நடிகர்களின் உடல், மொழியிலும் இப்படம் ஒரு மைல் கல். தமிழ் சினிமாவுக்கு புதுத்திறப்பை தந்த படம். ஆனால் இப்படத்தை ரசிகர்கள் ஆதரிக்காதது பெரும் ஏமாற்றமே.

விரைவில் வேலாயுதம், நண்பன், 7 ஆம் அறிவு ஆகிய படங்கள் வெளிவரவிருக்கின்றன.இந்த வருடத்தின் இனி வரும் மாதங்களிலாவது தமிழ் சினிமாவுக்கு வசந்த காலமாக அமையவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100 ஆவது இதழ்

## இவ்வார மெயிலில் இவர்...



# ஜமக் குமாரி கிமைர்

எமது மனங்களின் வலிமை மிகவும் உறுதியாக இருக்குமிடத்து ஊனம் ஒரு தடையில்லை என்பதனை நிரூபித்திருப்பவர் நேபாளத்தின் ஜமக் குமாரி கிமைர்.

பெருமூளை வாதம் *(Cerebral Palsy)* எனப்படும் கொடிய நோயினால் பாதிக்கப்பட்ட நிலையில் சீராக எழுந்திருக்கவோ அல்லது எழுந்து நிற்கவோ, நடக்கவோ முடியாமல் அவதிப்படும் ஜமக் குமாரி,தனது இலக்கியப் படைப்புகளுக்காக இவ்வருடத்திற்கான மதன் புரஸ்கர் பரிசினை பெற்றுள்ளார்.

ஆனால், இலக்கியத்துறையில் வழங்கப்படும் மிகவும் உயரிய விருதான இவ்விருதினை பெற்றுக் கொண்ட ஜமக் குமாரி நம்மைப்போல் கைகளால் எழுதவில்லை மாறாக தனது கால்களால் எழுதியே இந்த இலக்கிய விருதினைத் தனதாக்கியுள்ளார்.

எண்ணிப்பார்க்கும் போது வேதனையுடன் நமது மனங்கள் குமாரியை பாராட்டுகின்றன.உண்மையில் அவரது இலக்கியத் துறைசார் சாதனையை ஏனைய எழுத்தாளர்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் உயர்ந்த விடயமாகவே உள்ளது.

காரணம் எந்த விதமான குறைகளுமின்றியுள்ள மனிதர்களில் எத்தனை பேர் சாதித்துவிட்டார்கள் அல்லது சாதிக்கத் துணிந்து விட்டார்கள்.

நேபாளத்தின் தங்குடா மாவட்டத்தின் கசிடே கிராம அபிவிருத்தித் திட்டத்தில் 1980 ஜூலையில் பிறக்கும் போதே குமாரிக்கு மூளைப் பெருவாத நோய் இருந்துள்ளது.

இவ்வாறான நிலைமை நாளடைவில் சீரடைந்துவிடும் என பெற்றோர்கள் கருதியபோதும் இன்று வரை அந்நிலைமை சீரடையவில்லை.

எத்தனையோ மருத்துவர்களின் ஆலோசனைகள் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டும் நோய் குணமடைவதற்குரிய சாத்தியக் கூறுகள் எதுவும் தென்படவில்லை.

இவ்வாறான நிலையில் பல இன்னல்களின் மத்தியில் குமாரி பெற்றோர்களினால் வளர்க்கப்பட்டு வந்ததுடன் பாடசாலைக் கல்விக்காக அவரை அனுப்பும் சூழ்நிலை இருக்கவில்லை.

பாடசாலைக்கு செல்லாத நிலையில் குமாரி எவ்வாறு எழுத்தறிவினைப் பெற்றார் என்பதுதான் எம்மை வியக்க வைக்கின்றது.

சகோதரி பாடசாலைக்கு சென்று வந்து வீட்டில் அவற்றை மீண்டும் கற்கும்போது தானும் அதனை கற்று முதன் முதலாக நிலத்தில் நேபாள அரிச்சுவடியின் முதல் எழுத்தான ‘க’வை எழுதியுள்ளார்.

நிலத்தில் எழுதிய அந்த எழுத்து தனது இதயத்திலும் செதுக்கப்பட்டுள்ள எழுத்து என அந்த நினைவை சுவாரஸ்யமாக நினைவு கூருகின்றார் குமாரி.

இவ்வாறாக எழுத்துகள் சொற்களாகி சொற்கள் வசனங்களாகி வசனங்கள் கோர்க்கப்பட்டு இன்று இலக்கியத்துறையில் முன்னணி படைப்பாளியாக உள்ளார் குமாரி.

ஒருவாறாக எழுத்தறிவினை உள்வாங்கிக்கொண்ட குமாரி இலக்கியத்துறையில் தனது ஈடுபாட்டினை வெளிப்படுத்தினார்.

கவிதை,சிறுகதை,நாவல், சுயசரிதை உட்பட பல ஆக்கங்களை படைத்த அவர் தனது படைப்புகள் மூலம் நேபாளத்தில் மட்டுமல்லாது சர்வதேச அளவிலும் பிரபலமாகியிருந்தார்.

சங்கல்ப் [உறுதி] ஆப்நாய் சிற்ற ஏ கினிஸ் கதிர் [தீயிலிபடப்படும் வரையான இறுதிச் சடங்குகள்] மஞ்சே விட்ரகா யொடஹறு [மனிதனுக்குள் இருக்கும் போர் வீரர்கள் குவாட்டி போன்ற கவிதைகள் குமாரியின் புகழ் பெற்ற கவிதைத் தொகுப்புகள் ஆகும்.

அவேசன் பச்சிகோ ஆகமம் [இறப்பின் பின்னரான வருகை] உள்ளிட்ட சிறுகதை தொகுப்புகள்,கட்டுரைகளும் இவரால் படைக்கப்பட்டன.

இவ்வாறாக இலக்கியத்தில் ஆர்வம் காட்டிய குமாரியால் எழுதப்பட்ட சுயசரிதையான ஜீவன் ஹாந்தா கி புள் [வாழ்க்கை முள்ளா அல்லது மலரா] என்ற படைப்புக்கே அவருக்கு மதன் புரஸ்கர் விருது வழங்கப்பட்டது.

இலக்கியத் துறையில் வழங்கப்படும் மிகவும் உயரிய விருதுகளில் இதுவும் ஒன்றாகும்.

அவயவங்கள் செயற்படாத நிலையில் தனது குடும்பத்திற்கே பெருமை தேடித்தந்த மகளால் குடும்பமே பெருமை அடைந்துள்ளது.

ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தம் மகவை சான்றோன் எனக்கேட்ட தாய் என்பது இங்கும் பொய்க்கவில்லை.

ஆனால், குமாரி பிறந்து இன்று வரை அவயவங்கள் செயற்படாதமையினால் அவதிப்படுவதை பெற்றோர் எவ்வாறு தாங்கி வருகின்றனர்.அவ்வாறு துன்பமடையும் அவர்களுக்கு இவ்விருது பூரண விடுதலையை தராவிடினும் சற்று ஆறுதலையாவது வழங்குகின்றதல்லவா.

**யோ.நிமல்ராஜ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Saturday மெயில் 100 ஆவது இதழ்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Saturday மெயில் 100 ஆவது

# விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்

## குழந்தையும் ரோபோவும் குணத்தால் ஒன்று



புதிதாக உருவாக்கப்படும் ரோபோக்களை குழந்தையாகக் கருதித்தான் ஆரம்பகட்டப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன என்று அமெரிக்கா வாழ் இந்திய விஞ்ஞானி தெரிவித்துள்ளார்.

மருத்துவம், விண்வெளி ஆராய்ச்சி, அணு ஆராய்ச்சி, இயற்பியல்,வேதியியல், ஆட்டோமொபைல் உட்பட பல துறைகளிலும் ஆராய்ச்சியாளர்களுக்கு உதவும் வகையில் ரோபோக்கள் உருவாக்கப்படுகின்றன.

பொருட்களை எடுப்பது,வைப்பது போன்ற செயல்களைச் செய்வதற்காக உருவாக்கப்படும் ரோபோக்களுக்கு அதற்கான பயிற்சிகளை அளிப்பதும் முக்கியம். அமெரிக்காவின் கார்ன்வெல் பல்கலைக்கழகத்தின் ரோபோடிக் ஆய்வு கூடத்தில் ரோபோக்களுக்கு அஷுதோஷ் என்ற விஞ்ஞானி தலைமையில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

ரோபோ பயிற்சி பற்றி இவர் கூறியதாவது;

பொருளின் வடிவம், நிறம் அவற்றின் அசைவுகள் ஆகியவை குழந்தைகளுக்குப் புதிதாக இருக்கும்.

எந்தப் பொருளை எடுத்தாலும் கூர்ந்து கவனிக்கும் ஆர்வத்துடன் திருப்பித் திருப்பிப் பார்க்கும். ரோபோக்களும் ஏறக்குறையக் குழந்தைகள் போன்றவைதான். பொருட்களின் வடிவம், நிறம் போன்றவற்றை குழந்தைக்குச் சொல்லிக் கொடுப்பதுபோல ரோபோவுக்குச் சொல்லிக் கொடுக்கிறோம். பொருட்களை எடுக்க வைக்கப் பயிற்சி அளிக்கிறோம்.

குழந்தைகள் ஒரு பொருளை உடனே எடுத்துவிடும். ஆனால், ஒரு இடத்தில் அதே பொருளை வைப்பதற்குச் சற்றுச் சிரமப்படும். ரோபோவும் இப்படித்தான். மேலும், மேசை என்றால் டம்ளரை நேராக வைக்க வேண்டும். பாத்திரம் தேய்க்கும் கருவியில் தலைகீழாக வைக்க வேண்டும். எந்தப் பொருளை எந்த இடத்தில் எந்த ஒழுங்கில் வைக்க வேண்டுமென்றும் ரோபோவுக்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறது.

பயிற்சிக்குப் பிறகு ஏற்கனவே வைத்துப் பழக்கப்பட்ட பொருட்களை ரோபோக்கள் 98 சதவீதம் சரியாக வைத்து விடுகின்றன. நன்கு பயிற்சியளிக்கப்பட்ட பிறகு புதிய பொருட்களைக் கூட ரோபோக்கள் கீழே போட்டுவிடுவதில்லை.

95 சதவீதம் சரியான இடத்தில் வைக்கின்றன. வேலை துல்லியமாக இருக்கும் என்றுதான் பல்வேறு துறைகளிலும் ரோபோ பயன்படுத்தப்படுகிறது. அதற்கு இதுபோன்ற பயிற்சிகள் மிகமிக அவசியம்.இவ்வாறு அஷுதோஷ் கூறியுள்ளார்.



## 100 ஆண்டுகளில் அயல் கிரகத்திற்கு பயணிக்க முடியும் என்கின்றனர் விஞ்ஞானிகள்

இன்னும் 100 ஆண்டுகளில் அயல் கிரகத்திற்கு பூமியில் இருந்து பயணம் செய்ய முடியும். அதற்கான முயற்சியை அமெரிக்க இராணுவ விஞ்ஞானிகள் மேற்கொண்டுள்ளனர்.

விண்வெளி மனிதர்கள் போன்ற வாயேஜர் ஆய்வுக் கலத்தை அனுப்பினால் வேற்றுக் கிரகத்தைச் சென்றடைய 70 ஆயிரம் ஆண்டுகள் ஆகும். வாயேஜர் மணிக்கு 38 ஆயிரம் மைல் வேகத்தில் செல்லக் கூடியது ஆகும்.

சூரியக் குடும்பத்தில் பூமியைத் தவிர, இதர நட்சத்திரங்கள்,கிரகங்கள், மனிதர்கள் வாழக்கூடியதாக இல்லை. எனவே, அயல் கிரகத்தைச் சென்றடைய விரும்பினால் அல்பா சென்டவுரி என்ற நட்சத்திரமே நமக்கு அருகாமையில் உள்ளது. எனவே, நாம் செல்ல விரும்பக்கூடிய கிரகமாகவும் உள்ளது.

அயல் கிரகத்திற்குச் செல்லும் திட்டம் 100 வருட நட்சத்திரக் கப்பல் என அழைக்கப்படுகிறது. இந்தத் திட்டம் குறித்து இன்னும் 12 வாரங்களில் முக்கிய முடிவு எடுக்கப்படுகிறது.

## செயற்கைக் கோள்களுக்கு ஆபத்து



செயலிழந்த செயற்கைக் கோள்கள் விண்கலங்களில் இருந்து வெளியேறிய பொருட்கள், சிறிய நட், போல்ட் என்று 22 ஆயிரத்திற்கும் அதிகமான பொருட்களில் விண்வெளியில் மிதக்கின்றன. இவற்றால் செயற்கைக் கோள்களுக்கு ஆபத்து ஏற்படலாம் என்று எச்சரிக்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

விண்வெளியில் சுற்றும் செயற்கைக் கோள்கள் தேவையற்ற பொருட்கள் தொடர்பாக அமெரிக்காவின் தேசிய ஆய்வுக் கவுன்சில் ஒரு ஆராய்ச்சி மேற்கொண்டது.

இதில் தெரியவந்த தகவல்களைத் தற்போது வெளியிட்டுள்ளது. அதில் கூறியிருப்பதாவது;

உலகின் பல நாடுகளும் பல ஆண்டுகளாக விண்ணில் செயற்கைக் கோள்களைச் செலுத்தி வருகின்றன.

இவை ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு செயலிழக்கின்றன. ஆனாலும் தொடர்ந்து விண்வெளியில் மிதந்து வருகின்றன. இது தவிர, விண்வெளியில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும்போது குப்பைகளாகப் பல பொருட்கள் வெளியேற்றப்படுகின்றன.

இவை மட்டுமன்றி, விண்கலங்கள் மற்றும் செயற்கைக் கோள்களிலிருந்து எதிர்பாராதவிதமாக விலகும் நட்,போல்ட்,டூல்ஸ் போன்றவையும் விண்வெளியில் சுற்றி வருகின்றன.

சிறிதும் பெரிதுமாக இவ்வாறு 22 ஆயிரத்துக்கும் அதிகமான பொருட்கள் பூமிக்கு அருகில் விண்வெளியில் சுற்றி வருகின்றன. செயலிழந்த செயற்கைக் கோள் ஒன்றைத் தகர்த்து அழிக்கும் முயற்சி 2007 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. ஏவுகணை போன்ற ஆயுதத்தால் மோதி அழிக்கப்பட்டது.

அது 1.50 இலட்சம் பீஸ்களாக உடைந்து விண்வெளியில் மிதந்தது. 2009 இல் இரு செயற்கைக் கோள்கள் எதிர்பாராத விதமாக மோதிக் கொண்டன. அதனாலும் குப்பைகளின் எண்ணிக்கை அதிகரித்தன.

இந்த விண்வெளி குப்பைகள் மணிக்கு 28 ஆயிரம் கி.மீ. வேகத்தில் சுற்றி வருகின்றன. தற்போது செயற்பாட்டில் இருக்கும் செயற்கைக் கோள்கள், விண்கலங்கள் ஆகியவற்றின் மீது இவை மோதினால் பெரிய அசம்பாவிதங்கள் நடக்கும் ஆபத்து உள்ளது. இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

விண்வெளி குப்பைகளைப் பத்திரமாக அகற்றுவது தொடர்பாகவும் ஆய்வுகள் நடந்து வருகின்றன. தூண்டில், வலைபோன்ற கருவிகளை வைத்து அவற்றை அகற்றலாம் என்று விஞ்ஞானிகள் பரிந்துரை செய்துள்ளனர். காந்த சக்தி கொண்ட பிரமாண்ட குடை மூலமாக அப்பொருட்களைக் கவர்ந்திழுக்கலாம் என்ற யோசனையும் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# யுத்தத்தின் தொடக்கம்

**சந்திரலேகா**

'முரளி சீக்கிரமா கிளம்புப்பா.நேரமாகுதுல்ல... நல்ல நேரம் முடிவதற்குள் பெண்ணைப் பார்த்துடணும்.' தாய் மீனாட்சி துரிதப்படுத்தினாள்.

இதோ ஆச்சரியம்!

வேகவேகமாய் தயாராகி முரளியும் வந்தான்.அடுத்த ஒரு சில நிமிடங்களில் அம்மாவும் மகனுமாய் பெண் வீட்டுக்கு



காரில் பயணப்பட்டார்கள். ஒரு மணி நேரத்தில் பெண் வீடு. வாசலில் கார் நின்றிருக்காது. அதற்கு வரவேற்பு பலமாகத் தெரிந்தது. கார் நின்ற இடத்துக்கே வந்து 'வாங்க வாங்க' சொன்னார். பெண்ணின் அப்பா.

மரியாதை சகிதம் பெண் வீட்டுக்குள் நுழையும்போதே முரளியின் கண்கள் அலைபாய்ந்தன. தான் பார்க்க வந்திருக்கிற வசந்தி எங்கேயாவது தென்பட மாட்டளா என்று தேடித் தவித்தன.

அவன் எதிர்பார்ப்பை தவிப்பாக மாற்றுவதற்குள் வசந்தியும் வந்தாள். சம்பிரதாயப்படி தேநீர் டம்ளருடன் வந்தாள். படபடக்கும் விழிகள் பட்டாம்பூச்சியாய் சிறகடிக்க தேநீர் கொடுத்தாள்.

முரளிக்கு வசந்தியை மிகவும் பிடித்துப்போனது. தாய் மீனாட்சியைப் பார்த்தான். அவளுக்குப் பிடித்திருந்ததை புன்னகை மூலம் காட்டினாள். நிச்சயதார்த்த நாளும் குறிக்கப்பட்டது.கிடைத்த இடைவெளியில் வசந்தியே அவனிடம் பேசினாள்.

'உங்கம்மாவை அத்தைன்னு நான் கூப்பிடமாட்டேன்' என்று அவள் தொடங்கியபோது சட்டென நிமிர்ந்தான் முரளி. சிரித்துக் கொண்டே சொன்னாள் வசந்தி 'உங்க அம்மாவை நானும் அம்மான்னு தான் கூப்பிடுவேன் சரியா?' என்றாள். நிம்மதியானவன், 'ஓகே... நீ எப்படி வேணுமின்னாலும் கூப்பிடலாம். உன் மகிழ்ச்சிதான் எனக்கு வேணும்' என்றான் நிம்மதியடைந்தவனாய். திருமணம் நடந்தது. வசந்தி சொன்னது போலவே மீனாட்சி அம்மாளை வாய் நிறைய அம்மாவென்றே கூப்பிட்டாள்.

நாட்கள் நகர்ந்தன. தலை தீபாவளியும் வந்தது. முரளி தனது அம்மாவையும் வசந்தியையும் கூப்பிட்டுக் கொண்டு ஜவுளி கடைக்குச் சென்றான்.மீனாட்சி ஒவ்வொரு புடவையாகப் பார்த்துக் கொண்டே வந்தவள். 'இந்தப் புடவை நல்லாயிருக்கு முரளி' என்று புடவையோடு மருமகள் வசந்தியிடம் சென்றாள்.புடவையைப் பார்த்த வசந்தி, 'இந்தப் புடவையை என் அம்மாவிற்காக ஏற்கெனவே செலக்ட் பண்ணி விட்டேனேம்மா... உங்களுக்கு வேற புடவை செலக்ட் பண்ணித்தர்றேன்' என்றாள்.

ஒரு கணம் அதிர்ந்து மீனாட்சி 'சரிம்மா... வேற புடவை எடுத்துக்கிறேன்' என்று சொல்லும் போது தன் குரலே மாறியதாக உணர்ந்தாள்.

அம்மா என்று வாய் சொன்னாலும் மனதளவில் மாமியாராகவே தன்னை வைத்திருக்கிறாள் நம் மருமகள் என்ற எண்ணம் அவளை அதிர வைத்தது.

**Saturday மெயில் சிறுகதை**

முதல் விரிசலுடன் அவர்கள் கார் ஜவுளிக் கடையில் இருந்து வீட்டுக்கு புறப்பட்டது.

மறுநாள் காலை. முரளி பாத்ரூமில் பல்துலக்கிக் கொண்டிருந்தான். 'எங்கடா வசந்தி?' கேட்டபடி மகனைப் பார்த்தாள் மீனாட்சி. 'அவ இன்னும் விழிக்கலைம்மா ... தலைவலின்னா'

'காலையிலேயே எழும்பற பழக்கம் வந்தாலே தலைவலி தன்னால போயிடும் போ.போய் அவளை எழுப்பி தேநீர் போடச் சொல்லு...' மீனாட்சியின் குரலில் அதிகாரம் தெரிந்தது. அதிர்ந்தாலும் அம்மாவை ஒருகணம் ஆச்சரியமாய் பார்த்தான் முரளி. மாமியார்-மருமகள் யுத்தத்தின் தொடக்கம் அது என்பது அந்த நேரத்தில் அவனுக்குப் புரியவில்லை.


நீங்களும் சிறுகதை எழுத விரும்பினால்
2 A4 தாள்களுக்கு மேற்படாத வகையில் எழுதி
Saturday மெயில் சிறுகதை
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...




# தர்மம்

**சாந்தி நடராஜன்**

மாலை நேரம். கன்னத்தில் கைவைத்து யோசனையில் அமர்ந்திருந்த கௌரியை ஆட்டோ சத்தம் கலைத்தது. ஆட்டோவை நிறுத்திய அருளானந்தம் கௌரியை நோக்கி வந்தார். "என்ன... தங்கச்சி பக்கத்து ஊர்ல இன்னிக்கு ராத்திரி அரிச்சந்திரா நாடகம் நடக்குது சுற்று வட்டார கிராமமே திரண்டு வரும். நேத்திக்கே உன் வீட்டுக்காரர்கிட்ட சொல்லியிருந்தேன். இப்ப வந்தார்னா போய்லர், பால் குண்டான்ல்லாம் நம்ம ஆட்டோல ஏத்திக்கிட்டு போய்டுவேன்" அவர்களுக்கு உதவும் நோக்குடன் பேசிய அருளானந்தம் அவர்கள் டீக்கடைக்கு தினம் வரும் வாடிக்கையாளரும் கூட.

பதிலுக்கு கௌரி அவனிடம் "இன்னைக்கு கடை கொண்டு வரும் நிலை அவர் இல்லேண்ணா" என்றாள் ஒருவித கவலையோடு. "என்னம்மா திடீர்ன்னு இப்படி சொல்ற? கொஞ்ச நேரத்துக்கு முன்ன யாரோ ஒரு பொம்பள கைக் குழந்தையோட வந்து... எம் புருஷன் ஒரு குடிகாரர்... என்னையப் புடிச்சி அடிச்சி உதைச்சிட்டார். அந்த கொடுமையை தாங்க முடியாமல் தான் இந்த பச்சக் குழந்தையை தூக்கிவிட்டு வெகு தூரம் நடந்தே வர்றேன். குழந்தை வேற பாலுக்கு அழுவுது இதுக்கு மேல என்னாலயும் நடக்க முடியலஎன்னா. உடனே இவர் டீக்கடைக்குப் பால் வாங்க வச்சிருந்த பணத்துல ஐம்பது ரூபாய் எடுத்துக் குடுத்துட்டார்ண்ணா"

"ஏம்மா அதுக்கு நீ எதுவும் கேக்கலியா தங்கச்சி..?"

"ச்சும்மா விடுவேனா பின்னே..? கேட்டேன் அதுக்கு அவர் அந்தக் குழந்தை அழுததைப் பார்த்ததும் அந்தம்மா சொன்னது மெய்யா பொய்யான்னு ஆராய்ச்சி பண்ணிக்கிட்டிருக்க முடியல. சரி விடு! அந்தக் கடவுளுக்கே வெளிச்சம். நா செய்தது தர்மமா இருந்தா அது நிச்சயம் நம்மைக் காக்கும்னு என்னைய சமாதானப்படுத்திட்டு கோவிலுக்கு சாமி கும்பிடபோயிட்டார்ண்ணா"

"அது சரி தங்கச்சி இப்ப நீ என்ன முடிவு எடுத்திருக்கே?"

"என்னத்தைண்ணே சொல்றது? கொஞ்சங் கூட உஷார் இல்லாம ஏமாற்றுப் பேர்வழிங்ககிட்ட ஐம்பது, நூறுன்னு பணத்தைக் கொடுத்துட்டு கடைக்குப் பொருள் வாங்கக் கூட காசு இல்லாம முழிப்பார். பேசாம கடையை இழுத்து மூடிட்டு மண்ணு அள்ளப்போய்யான்னு சொன்னாத்தான் அந்த மனுஷனுக்கு புத்தி வரும்"

"கௌரி நம்ம ஊர் தலைவர் மகன் மணி டூவிலரில் வர்றாரு. வெளியே வந்து என்னான்னு கேளு"

என்னவாக இருக்கும்..? என்ற கேள்விக்குறியோடு கடைக்கு வெளியே ஓடி வந்துவரவேற்ற கௌரியிடம்...

"இந்தாம்மா.. இந்த கேன்ல இருபது லிற்றர் பால் இருக்குது. ஏதாவது ஒரு பாத்திரம் எடுத்து வந்து பாலை ஊத்திக்கிட்டு சீக்கிரமா எனக்கு கேனைக் கொடும்மா"

என்ன ஏதுன்னு ஒன்றும் புரியாமல் அவள் தயங்க, "எதுக்கம்மா யோசிக்கற...? எங்க பண்ணையில் இருந்து டவுன்ல உள்ள பால் பண்ணைக்கு பால் அனுப்புறோம். இன்னிக்கு போன பால் அங்கே நடக்கிற திடீர் ஸ்ட்ரைக்கால திரும்பி வந்துருச்சு. அதனால் இந்தப் பாலை உடனடியாக உங்க டீக்கடைக்கு எடுத்துட்டு வர்றேன். இதுக்கு நீங்க பணம் எதுவும் தரவேணாம்" என்று மிகவும் சாதாரணமாக சொன்ன கிராம தலைவரின் மகன் டூவிலரின் வேகத்தைக் கூட்டினான்.

நடப்பது கனவா! நனவா ? வியந்து நின்ற அருளானந்தத்திடம்

"அண்ணா! இந்தாங்க இந்த நெம்பருக்கு போன் பண்ணி அவரை சீக்கிரம் வரச்சொல்லுங்க நான் அதுக்குள்ள போய்லர், பால்குண்டான் மற்றதெல்லாம் எடுத்து வைக்கிறேன்" என்றாள் கௌரி திடீர் சந்தோஷத்தால் திக்குமுக்காடியபடி. தர்மம் இப்படியெல்லாம் கூட ரிட்டர்ன் ஆகுமா என்ற ஆச்சரியமும் இப்போது அவளிடம் சேர்ந்து கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடலே...

உலகின் உன்னத அதிசயமாக
திகழவும்
திகிலூட்டவும் காரணம்
ஓடியோடி உழைப்பதனாலா?
உன் களஞ்சிய
அறையில்
முத்துக்களும் மகா
சொத்துக்களும்
சொந்தமாகிப் போனது
உன் உழைப்பினால் தானே!

நிலவுக்கு
வலை விரிக்கும் நீ
கரையை
பகிரங்கமாய்
முத்தமிட்டு திரும்பும்
மர்மம் தான்
விளங்கவில்லை

நீரை வானுக்கு
கடனுதவி செய்யும் நீ
என்றும் ஈவதால் தானோ!
நீரால்
நிறைந்து கொண்டே
இருக்கிறாய்!
உன் சிறார்கள்
ஆவேசமாய்
ஓடியாடி திரிவதால்
களைப்படைவதில்லையே
ஓ உலகில்
பலசாலியின்
பாலகர்கள்
அல்லவா அவர்கள்.

**பா.ரிசாந்தன்,**
**ஹொப்டன்**

# நீயும் என் தாயும்

அன்பே...
உன்னை நினைத்து
கவிதை வரைய...
எத்தினையோ மொழிகளில்
கருக்கள் எடுக்கிறேன்
அத்தனையும்...
களைப்புகளாகவே...
முடிகின்றன...மீண்டும்...
மீண்டும்...முயன்றும்...
முடியவில்லை...எனக்கு...
சரி...முடியாது மறந்து
விடுவோம் என
நினைக்கையில்
மறுகணம் புதிதாய் உதிக்குது
இன்னொரு...கவி...
முயன்றுபார்க்கிறேன்
முடியவில்லை
ஏதோ புதிதான புதிர்...
உன்னில் உள்ளது...அதை
அறியும் வரை...தெரியும் வரை
தொடர்ந்திடும் என்...கவி

**பரகடுவ**
**கே.எம்.சம்ஸ்**

# கோபக்காரி

உன் கோபத்தில்
எனக்கும் பங்கு கொடு
எனக்கும் உன்னிடம்
கோபப்பட
தெரியவில்லையே!

நீ கோபமான ஒரு
கவிதையாய் இருக்கும்போது
நான் காலம் போற்றும்
கவிஞனாகி விடுகிறேன்.

நீ கண்களை சிமிட்டி
உதட்டை சுழிக்கும் போது
என் உணர்வுகள்
உருவம் பெற்று
புன்னகைக்கும்

என் கோபத்தைக் குறைக்கச்
சொன்னாய் நீ
கோபித்துக் கொண்டு
அழுது கொள்பவர்க்கு
அழுது கொண்டே ஆறுதல்
சொல்வது போல

மழைத்துளிகள் பாவம்
கண் தெரியாமல்
காட்டு முட் செடிகளில்
விழுந்து
உயிர் வலிக்க
உடைந்து போகிறது
உன் கோபத்தில் நானும்
அப்படித்தான்

நீ அழகிய கோபக்காரிதான்
என்னில் நிறைந்திருக்கும்
நேசந்தான் கோபம்
என்பதை
உன் கோபத்தின் ஊடே
சொல்லிக் கொள்வது
புரிகிறது பெண்ணே!

**செ.மோகன்ராஜ்,**
**நெடுந்தீவு-12.**

# நீ வருவாய் என...

ஆசையாய் பொத்தி வைத்த
அன்பு பொக்கிஷம் நீ
இதய அறையின்
இன்ப நாயகன் நீ
உன் உணர்வுகளை
தூண்டியவன் நீ
என்னையே மறந்து உன்னையே
நினைக்க செய்தவன் நீ
இன்றோ???
மறந்து விடு என்னை!என்று
மறுப்பில்லாமல் கூறுகின்றாய்
மரண அழைப்பு முன்னால்
மறுக்கிறது என் இதயம்
காரணம்...
உன் நினைவுகள் என்
சிந்தை விட்டு சென்றுவிடுமே
எனும் ஏக்கத்தால்...
ஆனால்...
இன்றும் உன் மேல் அழியா
காதலுடன் காத்திருக்கின்றேன்
நீ வருவாய் என!!!
உன் வருகைக்காய்...

**அபி,**
**வட்டுக்கோட்டை.**

# நீ பேசு...

ஒற்றை மொழி
நீ பேசு...
ஒரு நொடியில்
வடித்திடுவேன்
உயிர்ப்பான ஒரு கவிதை...

**பா.பொன் நிலவன்,**
**மீசாலை.**

# காலைப்பொழுது



கீழ்வானம் சிவக்கையிலே
கிழக்கு வெளுக்கையிலே
தாமரை மலர்கையிலே
பறவைகள் பறக்கையிலே
சந்திரன் ஓடிமறைகையிலே
பூக்கள் பூக்கையிலே
மக்கள் எழுந்திருக்கையிலே
இளஞ்சூரியன் உதிக்கின்றான்
தன் கதிர்களால் எம்மை
குளிர வைக்கின்றான்

**க.மதுசுஜா,**
**கெருடாவில், தொண்டைமானாறு.**

# தோழனே!

வாழ்வில் நாம் காண்பதோ
பல முகங்கள்
ஒவ்வொன்றும் பொய் முகங்கள்
எரிகின்ற தீபம் ஒளி தரும் போதும்
விளக்கின் அடியிலே
இருள் வட்டம் போடும்
தீபத்திற்கே இருமுகம் என்றால்
மனிதர்க்கு எத்தனையோ!

# பெண்ணே!

என் எதிரே
நீ வந்தாய்-என்
கனவு அழகானது
என்னைப் பார்த்து
மெல்லச் சிரித்தாய்-என்
கவிதை அழகானது
என் அருகே வந்து நீ
அமர்ந்தாய்-என்
காதல் அழகானது
என்னோடு நீ இணைந்தாய்
எல்லாமே பொய்யானது

**ர.கீதா, சுன்னாகம்.**

# மறுபிறப்பு

உயிர் தந்த தாயே
உன் உயிர் எனக்கு தந்துவிட்டு
நீ எங்கு சென்றாய்
மீண்டும் வருவாயா இவ்வுலகிற்கு
என் மகளாய் மறுபிறப்பு எடுத்து

**தா.பேனான்**
**உடும்பையூரான்**

உங்கள் கவிதைகளும் இப்பகுதியில்
வரவேண்டுமானால்
**Saturday மெயில்**
இல. 68, எலி ஹவுஸ் வீதி,
கொழும்பு-15
என்னும் முகவரிக்கு
எழுதி அனுப்புங்கள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Saturday மெயில் 100 ஆவது

# ஆள் பாதி 'மேக்கப்' மீதி

ஆள்பாதி ஆடைபாதி என்பது பழமொழி. ஆனால், தற்போது ஆள் பாதி மேக் அப் மீதி என்று புதுமொழி உருவாகும் அளவிற்கு ஒப்பனை என்பது அனைவரின் அங்கமாகி வருகிறது. அழகுக்கு அழகு சேர்க்கும் வகையில் சந்தைகளில் மேக் அப் சாதனங்கள் குவிந்துள்ளன. ஒருவர் மேக் அப் போடுவதை வைத்தே அவரின் குணத்தைக் கண்டுகொள்ள முடியும் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

முகத்திற்குக் கொஞ்சம் பவுடர்,லிப்ஸ்டிக் எனச் சிறிதளவு மேக் அப் போட்டுக் கொண்டாலே பெண்களின் அழகை உயர்த்திக் காட்டும். ஆனால், ஒரு சிலருக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட மேக்அப் சாதனங்களைப் பயன்படுத்தினால் தான் திருப்தியாக இருக்கும். எனவே, மேக்அப் போட்டுக்கொள்ளும் ஒருவரது ஆர்வத்தை வைத்து அவரது குணத்தைக் கண்டறியலாம் என்கிறார்கள் உளவியல் நிபுணர்கள். இதன்படி மேக்அப் போட்டுக்கொள்பவர்களை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

**அனைத்திலும் கச்சிதம்:**

ஒரு சிலர் மேக்அப் இல்லாமல் வெளியில் தலைகாட்டமாட்டார்கள். அதாவது வீட்டுக்குள்ளும் இவர்கள் பெரும்பாலான நேரங்களில் மேக்அப்புடன் தான் இருப்பார்கள். வீட்டைவிட்டு வெளியில் கால் வைத்தாலே மேக்அப் சகிதமாகத் தான் புறப்படுவார்கள். போட்டிருக்கும் மேக்அப் எப்படி இருக்கிறது? என்பதை அவ்வப்போது சரி பார்த்துக் கொள்வார்கள். மேக்அப் கொஞ்சம் கலைந்திருந்தாலே உடனடியாகச் சரி செய்துவிட்டுத்தான் அடுத்த வேலையில் ஈடுபடுவார்கள்.

இந்த வகையினர் பழகுவதில் கெட்டிக்காரர்கள். ஆண்,பெண் பேதமின்றி எல்லோரிடமும் நட்புடன் பழகக் கூடியவர்கள். எப்போதும் இவர்களது முகத்தில் புன்னகை தவழ்ந்து கொண்டேயிருக்கும். தன்னை மற்றவர்கள் பெருமையாகப் பேச வேண்டும் என்று நினைப்பார்கள். ஏதாவது ஒரு வேலையைத் தாங்களாகவே இவர்கள் செய்ய விரும்பினால் அதில் முழுக் கவனத்தையும் செலுத்தி கன கச்சிதமாகச் செய்து முடிப்பார்கள். அடுத்தவர்கள் வேலையைத் திணிப்பதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

**ஆடையிலும் அசத்தல்**

இவர்கள் ஆடை விடயத்திலும் அசத்தி விடுவார்கள். எந்த விழாக்களுக்கு எப்படிப்பட்ட ஆடையை அணிய வேண்டும் என்று மற்றவர்கள் கேட்டுத் தெரிந்துகொள்ளும் அளவிற்கு அதில் எக்ஸ்பேர்ட் ஆக இருப்பார்கள். அடிக்கடி விதவிதமான ஆடைகள் அணிந்து மற்றவர்களை வியப்பில் ஆழ்த்துவார்கள். இந்தத் தன்னம்பிக்கை பேர்வழிகள் ஈடுபட்ட துறையில் சாதிக்கவும் செய்வார்கள்.

**உதவி செய்யும் மனப்பான்மை:**

இரண்டாமவர்களை மேக் அப் போட்டுக்கொள்வதில் அதிக ஆர்வம் உள்ளவர்கள் என்று கூற முடியாது. ஆர்வம் இல்லாதவர்கள் என்றும் கூற முடியாது. முதல் வகையைச் சேர்ந்தவர்களின் ஆர்வத்தில் பாதியளவு



ஆர்வத்தை இவர்கள் பெற்றிருப்பார்கள். வீட்டில் இருக்கும்போது மேக் அப்பைத் தேர்ந்தெடுக்கமாட்டார்கள். வீட்டில் ஏதாவது விசேடம் என்றால் மாத்திரம் மேக்கப் போட்டுக்கொள்வார்கள். வெளியிடங்களுக்குச் செல்லும்போது மேக்அப் கலைந்து விட்டால் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளமாட்டார்கள். இருப்பதை வைத்து சமாளிப்போம் என்று அட்ஜஸ்ட் செய்து கொள்வார்கள்.

விட்டுக்கொடுத்துச் செல்லக்கூடியவர்கள் பெரும்பாலும் இந்த வகையினராகத் தான் இருப்பார்கள். இவர்கள் எதற்கும் ஒரு எல்லைக்கோட்டை நிர்ணயித்துக் கொண்டு செயல்படுவார்கள். எந்தவொரு செயலையும் எடுத்தோம்,கவிழ்த்தோம் என்று முடிக்கமாட்டார்கள். இவர்களது நடவடிக்கைகளில் வேகத்தைவிட விவேகம் தான் மிகுதியாகக் காணப்படும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பது அவர்களைப் பொறுத்த வரை 100 சதவீதம் பொருந்தும். முகம் தெரியாத நபர் உதவி தேடி வந்து இவர்களைச் சந்தித்தால் முடியாது என்று கூறாமல் முடிந்தவரையிலான உதவிகளைச் செய்யக்கூடியவர்கள் இந்த வகையினர். இதனால் இவர்களுக்கு எல்லோரிடத்திலும் நல்ல பெயர் இருக்கும்.

ஆடை விடயத்தில் இவர்கள் ஓ போடவும் வைக்கமாட்டார்கள். ஒன்றும் இல்லை என்று கூறும் அளவிற்கு இருக்கமாட்டார்கள். ஆடை விடயத்தில் தீவிர கவனம் செலுத்துபவர்களாக இருக்கும் இவர்களிடம் வெட்டி பந்தா இருக்காது.

**மனம் திறக்கும் மங்கையர்:**

ஒரு சிலர் மேக்அப் போட்டு இருக்கிறார்களா என்பதை உற்றுநோக்கினால்தான் தெரியும். இவர்கள் மூன்றாவது ரகத்தைச் சேர்ந்தவர்கள். ஏதோ அவர்களும் போட்டார்கள் அதனால் நானும் போட்டுக்கொண்டேன் என்கிற ரீதியில் இவர்களது மேக்அப் இருக்கும். வீட்டில் இருக்கும்போது இவர்கள் மேக்அப் போட்டுக்கொள்வது அரிதான விடயம். அப்படியே மேக்அப் போட்டு இருந்தாலும் அதைப் பிறர் கண்டுபிடிப்பது ரொம்பக் கடினம். வெளியிடங்களுக்குச் செல்லும்போது மட்டும் இலேசாக மேக்அப் போட்டுக்கொள்வார்கள். சென்ற இடத்தில் மேக்அப் கலைந்தாலும் அதை ஒரு பொருட்டாகவே கண்டுகொள்ளமாட்டார்கள்.

இவர்கள் எந்தச் செயலை மேற்கொண்டாலும் அதில் முழு ஈடுபாட்டுடன் கலந்துகொள்ள முயற்சிப்பார்கள். மனதில் உள்ள விடயங்களை எளிதில் மற்றவர்களிடம் கூறிவிடமாட்டார்கள். பல விடயங்களை மனதிற்குள்ளேயே பூட்டி வைத்துப் புழுங்கிக் கொண்டிருப்பார்கள். மிகவும் நெருக்கமானவர்களிடம்தான் மனம் திறந்து பேசுவார்கள். மற்றவர்கள் இவர்களிடம் பேச்சுக்கொடுத்தால் ஓரிரு வார்த்தைகளில் தான் பதில் இருக்கும். மற்றப்படி இவர்களிடம் பெரியதாக எதையும் எதிர்பார்க்க முடியாது. ஆடை விடயத்தில் இவர்கள் எப்போதாவது தான் கவனம் செலுத்துவார்கள்.

**புன்னகை என்ன விலை?**

இவர்கள் தான் கடைசி வகையினர் என்பதால் மேக்அப் போட்டுக் கொள்வதிலும் இவர்கள்தான் கடைசி நிலையினர். மேக்அப் போட்டுக் கொள்ள வேண்டும் என்று இவர்கள் நினைத்துப் பார்ப்பதே அரிது. கட்டாயப்படுத்தினால்தான் மேக்அப் போட்டுக்கொள்வார்கள். வீட்டில் இருக்கும்போது மருந்துக்குக்கூட இவர்களிடம் மேக்அப்பை எதிர்பார்க்க முடியாது. திருமணம்,கோவில் விழா மற்றும் சுப வைபவங்களுக்குச் செல்லும்போது மட்டுமே இவர்கள் மேக்அப்பைத் தேடுவார்கள். அதுவும் ஏனோ,தானோ என்றுதான். இவர்கள் முகத்தில் புன்னகையை எதிர்பார்ப்பது ரொம்பவும் கஷ்டப்பட வேண்டியதாக இருக்கும். யாரிடமும் அதிகம் பேச விரும்பாத இவர்களுக்குத் தனிமை தான் பெரும்பாலும் துணையாக இருக்கும். வாழ்க்கையில் விரக்தி அடைந்தவர்களுக்கு உதாரணமாக இவர்களைக் கூறலாம்.

தாங்கள் அழகாக இல்லை என்ற தாழ்வு மனப்பான்மை இவர்களிடம் மிகுதியாக இருக்கும். இதனால் இவர்களிடம் கலகலப்பை எதிர்பார்க்க முடியாது. எப்போதும் எதையோ பறிகொடுத்தவர்கள் போல இருப்பார்கள். ஆடை விடயத்திலும் இவர்கள் அப்படியே!

இந்த வகையான ஆராய்ச்சி அயல்நாடுகளிலும் மேல்தட்டு வர்க்கத்தில் வசிக்கும் பெண்களிடையே நடைபெற்றது. நம் ஊரிலோ வீட்டு வேலையை அவசர அவசரமாகச் செய்துவிட்டு அள்ளிச் சொருகிக் கொண்டு அலுவலகத்திற்குப் போகும் பெண்களுக்கு இந்த ஆய்வு சரிப்பட்டு வருமா என்பது தெரியவில்லை.

இந்த நான்கு வகையினரில் நம் ஊர்ப் பெண்கள் எந்த வகையினர் என்பது இப்போது தெரிந்திருக்கும். ஆனால், இதில் உள்ளபடியே கடைப்பிடிக்க வேண்டியது என்பது அவசியமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வியக்க வைக்கும் வீரர்

முழங்காலுக்குக் கீழ் இரு கால்களும் துண்டிக்கப்பட்ட வீரர் ஒருவர் தென்கொரியாவின் டேகு நகரில் நடைபெறும் உலக மெய்வன்மைப் போட்டிகளில் சாதாரண வீரர்களுடன் போட்டியிட்டு வியக்க வைத்து வருகிறார்.

4X100 மீற்றர் அஞ்சலோட்டத்தில் இவரை ஒரு அங்கத்தவராகக் கொண்ட தென்னாபிரிக்க அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

ஒஸ்கார் பிஸ்டோரியஸ் எனும் இவ் வீரர் பிறக்கும் போதே கால்களில் குறைபாடுகளுடன் பிறந்தவர். இவர் 11 மாதக் குழந்தையாக இருந்த போது அவரின் இரு கால்களும் துண்டிக்கப்பட்டன. உலோகத்தாலான செயற்கைக் கால்கள் பொருத்தப்பட்டன. எனினும் முழுமையான கால்கள் இல்லை என்பதால் அவர் சோர்ந்துவிடவில்லை. அவர் வளர வளர அவரின் விளையாட்டுத் திறமையும கூடவே வளர்ந்தது.

சிறுவயதிலிருந்தே ஓட்டப் போட்டி, நீச்சல், றக்கி, உயரம் பாய்தல் என பல்வேறு விளையாட்டுகளிலும் அவர் பங்குபற்றினார். பின்னர் ஓட்டப் போட்டிகளில் தீவிர கவனத்தைச் செலுத்தத் தொடங்கினார். 'பிளேட் ரன்னர்' என அவர் வர்ணிக்கப்படுகிறார்.

மாற்றுத் திறனாளிகளுக்கான 100,200 மற்றும் 400 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் தற்போதைய உலக சாதனையாளர் இவர்தான். ஆனால், அங்கவீனமானோர் அல்லது மாற்றுத் திறனாளிகளுக்கான போட்டிகளில் பங்குபற்றிய சாதனை படைப்பதில் அவர் திருப்தியடையவில்லை.

ஆரோக்கியமாகவுள்ள ஏனையோருடனும் தன்னால் போட்டியிட முடியுமென அவர் நிருபிக்க திட்டமிட்டார். 2007 ஆம் ஆண்டு சாதாரண வீரர்களுக்கான ஓட்டப் போட்டிகளில் அவர் பங்குபற்றினார்.

எனினும் பிஸ்டோரியஸின் செயற்கைக் கால்கள் அவருக்கு அசாதாரண அனுகூலத்தை வழங்குவதாகக் கூறிய சர்வதேச மெய்வன்மைச் சங்கங்களின் சம்மேளனம், சாதாரண வீரர்களுக்கான போட்டிகளில் பிஸ்டோரியஸ் பங்குபற்றுவதற்கு 2008 ஆம் ஆண்டு தடை விதித்தது.

இதற்கு எதிராக விளையாட்டுப் பிணக்குகளுக்கான சர்வதேச நீதிமன்றில் முறைப்பாடு செய்தார் பிஸ்டோரியஸ். ஆரோக்கியமான வீரர்களை விட பிஸ்டோரியஸின் செயற்கைக் கால்களால் அவருக்கு அனுகூலம் இல்லையென தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்நிலையில், உலக மெய்வன்மை சாம்பியன்ஷிப் மற்றும் 2012 ஒலிம்பிக் போட்டிகளில் 400 மீற்றர் ஓட்டத்தில் பங்குபற்றுவதற்கான 45.7 விநாடி இலக்கை கடந்த ஜூலை மாதம் ஒஸ்கார் பிஸ்டோரியஸ் அடைந்தார்.

இதையடுத்து தென்கொரியாவில் நடைபெறும் உலக மெய்வன்மை போட்டிகளின் தனிநபர்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் பங்குபற்றிய அவர், அரையிறுதிவரை முன்னேறினார். அரையிறுதியில் கடைசி இடத்தையே பெற்றதால் அப்போட்டியிலிருந்து அவர் விலக நேரிட்டது.

எனினும் 4X400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் பங்குபற்றி தென்னாபிரிக்கா இறுதிப் போட்டிக்கு தகுதி பெறுவதற்கு ஒஸ்கார் பிஸ்டோரியஸ் பங்காற்றினார். அரையிறுதிப் போட்டியில் தனது சொந்த சாதனையொன்றுடன் இறுதிப் போட்டிக்கு தென்னாபிரிக்கா தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அணி மீண்டு வரும்

இலங்கை அணி மீண்டு வருமென்ற நம்பிக்கையிருப்பதாக இலங்கை அணியின் முன்னாள் சுழல் பந்து ஜாம்பவான் முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

காலியில் நடைபெற்ற முதல் டெஸ்டில் இலங்கை அணி தோல்வியைத் தழுவியது. மோசமான ஆடுகளமாயிருந்த நிலையில் இலங்கை அணி தோல்வியடைந்தமை அணியைப் பெரிதும் பாதித்துள்ளது.

தங்களுக்குச் சாதகமாக ஆடுகளத்தைத் தயாரிக்க முற்பட்டதாலேயே அது அவர்களுக்கு வினையாகிவிட்டதாக விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். இவ்வாறான கருத்தையே முரளிதரனும் பிரதிபலித்துள்ளார்.

காலி டெஸ்டுக்கு நல்ல ஆடுகளம் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டுமெனவும் இலங்கை அணிக்கு சாதகமாக ஆடுகளம் தயாரிக்க முற்பட்டமை இலங்கை அணியையே பாதித்துவிட்டதாக தான் கருதுவதாகவும் முரளிதரன் கூறியுள்ளார்.

ஆனாலும் இந்த ஆடுகளத்தில் 2 ஆவது இனிங்ஸில் மஹேல ஜெயவர்தன சதமடித்ததை அவர் பெரிதும் பாராட்டியுள்ளார். இது அவரது திறமையை நன்கு வெளிப்படுத்தியுள்ளதாகவும் அஞ்சலோ மத்யூஸ் 95 ஓட்டங்களைப் பெற்றதும் சிறப்பானதெனவும் கூறியுள்ளார்.

துடுப்பாட்ட வீரர்கள் ஓட்டங்களைப் பெறவேண்டுமெனவும் அவர்கள் ஓட்டங்களைப் பெறாவிடில் வெற்றிபெற முடியாதெனவும் கூறியதுடன், முதல் டெஸ்டில் இலங்கை அணி தோல்வியடைந்த போதும் அடுத்த டெஸ்ட்களில் மீண்டுவரும் ஆற்றலுள்ளதாகவும் தெரிவித்தார்.

அதே நேரம், பழைய அணிபோல் அவுஸ்திரேலியா ஆற்றல் பெற்றதெனவும் முன்னைய அணி உலகிலேயே சிறந்த அணியாக விளங்கியதாகவும் ஆனால் தற்போதைய அணி அந்தளவிற்கு ஆற்றல் கொண்டதல்ல என்பதால் இலங்கை அணிக்கும் வெற்றி வாய்ப்புள்ளதாகவும் முரளிதரன் கூறினார்.

தற்போதைய அவுஸ்திரேலிய அணி துடுப்பாட்டத்திலும் சரி பந்து வீச்சிலும் சரி மிகவும் திறமையானதல்ல. பந்து வீச்சு பலவீனமாகவேயுள்ளது. அனுபவம் மிக்க வீரர்கள் குறைவென்பதால் இரு வருடங்களுக்கு முன்னர் இருந்தது போல் இப்போது அந்த அணி இல்லையென்றும் கூறினார்.

2 ஆவது டெஸ்ட் போட்டி கண்டி பள்ளேகலவில் நடைபெறுகிறது. இது முரளிதரனின் வீட்டிலிருந்து சில கிலோ மீற்றர் தூரத்திலேயே உள்ளது. எனினும் முரளிதரன் இந்த மைதானத்திற்குச் சென்று போட்டியைப் பார்க்க விரும்பவில்லை. வீட்டில் தொலைக்காட்சி மூலமே போட்

டி யைப்






# அஜந்தவுக்கு அஞ்சும் ஆஸி. வீரர்கள்

இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் அஜந்த மெண்டிஸுக்கு அவுஸ்திரேலிய அணி பயப்படுவது தெரியவந்துள்ளது.

பார்ப்பதாகவும் கூறியுள்ளார்.

காலியில் நடைபெற்ற முதலாவது டெஸ்டில் இலங்கை அணி 125 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இந்தப் போட்டியில் அஜந்த மெண்டிஸ் விளையாடவில்லை.

இந்த நிலையில் முதல் டெஸ்டின் 2 ஆவது இனிங்ஸில் விக்கெட் எதனையும் கைப்பற்றாத சுராஜ் ரன்திவ்வுக்குப் பதிலாக அஜந்த மெண்டிஸ், கண்டி பள்ளேகலவில் வியாழக்கிழமை ஆரம்பமான 2 ஆவது டெஸ்டில் பங்கேற்பாரென எதிர்பார்க்கப்பட்டது. எனினும் 2 ஆவது டெஸ்டிலும் மெண்டிஸ் விளையாடவில்லை.

இலங்கை-அவுஸ்திரேலிய அணிகளிடையே பள்ளேகலவில் நடந்த 'ருவெண்ரி-20' போட்டியில் ஆறு விக்கெட்டுகளை கைப்பற்றி உலக சாதனை படைத்த மெண்டிஸ் அணியின் வெற்றியையும் உறுதிப்படுத்தியிருந்தார்.

இதனால் அவுஸ்திரேலிய வீரர்கள் அஜந்த மெண்டிஸ் குறித்து அச்சமடைந்திருந்தனர். அத்துடன், அவர் பள்ளேகல டெஸ்டில் விளையாடுவாரெனத் தெரிவிக்கப்பட்டதால் கவலையடைந்தனர்.

2 ஆவது டெஸ்டில் மெண்டிஸ் விளையாடக்கூடாதெனத் தாங்கள் பிரார்த்தனை செய்வதாகவும் அணித் தலைவர் மைக்கல் கிளார்க் கூறியிருந்தார். அவர்களது பிரார்த்தனையின் பலனோ என்னவோ 2 ஆவது டெஸ்டிலும் மெண்டிஸ் அணியில் இடம்பெறவில்லை.

மெண்டிஸ் மிகச் சிறந்த பந்து வீச்சாளர். அவரது வித்தியாசமான பந்து வீச்சு முறை துடுப்பாட்ட வீரர்களைத் தடுமாறச் செய்யும். ஒவ்வொரு பந்தும் ஒவ்வொரு விதமாயிருக்கும். முதல் டெஸ்டில் அவரை அணியில் சேர்க்காதது குறித்து ஆச்சரியமடைந்தோம்.

2 ஆவது டெஸ்டில் அவர் விளையாடவுள்ளதாகத் தகவல்கள் வெளியானதால் அவரது பந்து வீச்சை எப்படி எதிர்கொள்வதென்பது குறித்துத் தீவிரமாக ஆராய்ந்தோம். அவர் பங்கேற்ற போட்டிகளின் வீடியோவை திரும்பத் திரும்பப் போட்டு அவரது பந்து வீச்சு முறை குறித்து நுணுக்கமாக ஆராய்ந்தோம். ஆனாலும் வீடியோவைப் பார்ப்பதைவிட அவரது பந்து வீச்சை எதிர்கொள்வது மிகக் கடினமாயிருக்குமென்றே கருதுவதாக மைக்கல் கிளார்க் கூறியிருந்தார்.

ஆனாலும் மெண்டிஸ் 2 ஆவது டெஸ்டிலும் விளையாடவில்லை. சுராஜ் ரன்திவ்வே விளையாடுகிறார். ரங்கன ஹேரத்துக்குப் பதிலாக சீகுகே பிரசன்ன அணியில் இடம் பெற்றுள்ளார். பள்ளேகல மைதானம் சுழற்பந்து வீச்சுக்கு மிகவும் சாதகமாயிருந்தும் மெண்டிஸ் இந்தப் போட்டியில் பங்குபற்றாததும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவின் விளிம்பில் ஒரு தேசம்

தனியொரு மனிதனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்றார் பாரதி.

ஆனால் பட்டினியால் நிமிடத்திற்கு நிமிடம் உயிர்கள் மடிந்து கொண்டிருக்கும் அவலத்தைக் கண்கூடாகப் பார்க்கின்ற நிலையிலும் இவ்விடயத்தில் உலக நாடுகள் சற்று ஒதுங்கியே நிற்கின்றன.

ஒருவேளை சோமாலியா, எதியோப்பியா போன்ற பஞ்சம் தலைவிரித்தாடும் நாடுகளில் எண்ணெய் வளமோ அல்லது அணுகுண்டு உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருள் வளங்களோ அதிகம் இருந்திருந்தால் உலக வல்லரசுகள் போட்டி போட்டுக் கொண்டு உதவிக்கரம் நீட்டியிருக்கலாம்....

ஆனால் என்ன செய்வது? வளப்பற்றாக்குறை தானே இம்மக்களை சாவின் விளிம்பில் கொண்டுபோய் நிறுத்தியுள்ளது.

கடந்த 60 வருடங்களாக மிக மோசமான வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள கிழக்கு ஆபிரிக்காவில் பட்டினிக்குக் காரணமான பஞ்சத்தால் இலட்சக்கணக்கானோர் உயிரிழந்து வருகின்றனர்.

இப்பிராந்தியம் முழுவதிலுமுள்ள சுமார் ஒரு கோடியே 20 இலட்சம் பேருக்கு உடனடியாக உணவு உதவிகள் தேவைப்படுவதாக ஐ.நா. தெரிவிக்கின்றது.

இந்நிலையில் கிழக்காபிரிக்காவின் ஒரு பிராந்தியமாக விளங்கும் சோமாலியாவில் 40 இலட்சம் மக்கள் இந்நெருக்கடிக்குள் சிக்கியுள்ள நிலையில் பஞ்சத்தின் கொடுமையால் தினம் தினம் நூற்றுக்கணக்கானவர்கள் மரணித்து வருவதாக வெளியாகும் செய்திகள் ஏற்படுத்தும் அதிர்ச்சி ஒருபுறமிருக்க, இந்நிலைமை தொடர்ந்தால் அடுத்த நான்கு மாதங்களில் ஏழரை இலட்சம் பேர் (7,50,000) உயிரிழக்க





நேரிடுமென ஐ.நா. அபாய எச்சரிக்கை விடுத்துள்ளது.

பசியின் கொடிய கரங்களுக்குள் நான்கு மாதங்களில் ஏழரை இலட்சம் உயிர்கள் மடியப் போகின்றது என்பது ஜீரணிக்கக்கூடிய விடயமா என்ன?

இதைவிடக் கொடூரம் ஏற்கனவே இங்கு மூன்றரை இலட்சம் சிறுவர்கள் பட்டினியால் மரணத்தைத் தழுவியிருப்பது.

'அவசர உதவிகளை வழங்குவதற்கான பதில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடில் நான்கு மாதங்களுக்குள் ஏழரை இலட்சம் உயிர்கள் காவு கொள்ளப்படும்'.

ஐ.நா.வின் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷணைப் பகுப்பாய்வுப் பிரிவின் இவ் எச்சரிக்கைக்கு உலக நாடுகள் எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன?

மரணத்தின் விளிம்பிலிருந்து இலட்சக்கணக்கான உயிர்களை மீட்பதற்கு வல்லரசுகள் மேற்கொள்ளும் முயற்சிகள் யாவை?

ஐ.நா.வின் அபாய எச்சரிக்கையைக் கேட்டதிலிருந்து மனிதத்தன்மையுள்ள இதயங்களைக் குடைந்து கொண்டிருக்கும் கேள்விகளே இவை.

மக்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை, மனிதாபிமான நடவடிக்கை என்ற பெயர்களில் தமது சொந்த நலன்களுக்காக ஏனைய நாடுகளில் கால்பதித்திருக்கும் வல்லரசுகள் உண்மையான இம்மனிதப் பேரவலத்தை எவ்வாறு கையாளப் போகின்றன?

தென் சோமாலியாவின் ஐந்து பிராந்தியங்கள் ஏற்கனவே பஞ்ச வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த நிலையில் தற்போது ஆறாவதாக பே என்னும் பிராந்தியம் பஞ்ச வலயமாக ஐ.நா.வால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இப்பஞ்ச வலயங்களின் பெரும்பாலான பகுதிகள் அல்-ஹைடாவுடன் இணைந்த அல்-ஷபாப் என்னும் இஸ்லாமிய போராளிக் குழுவின் கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

# உலக வலம்

ச.துஷ்யந்தினி

தனது கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் பகுதிகளுக்குள் உதவி அமைப்புகளை அல்-ஷபாப் அனுமதிக்காமையால் அங்கு உணவு விநியோகங்களை மேற்கொள்ள முடியவில்லையென ஐ.நா. அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 20 வருடங்களாக மோதல்களால் பாதிக்கப்பட்டுள்ள சோமாலியாவில் மிகவும் பலம் குன்றிய அரசென்றே அதிகாரத்தில் உள்ளது. ஐ.நா.வின் ஆதரவைப் பெற்ற இவ் அரசு தலைநகர் மொஹாடிசுவையும் ஏனைய சில பிராந்தியங்களையும் மட்டுமே தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளது.

இந்நிலையில் உதவிப் பணியாளர்கள் மீது அல்-ஷபாப் போராளிகள் விதித்துள்ள கடுமையான கட்டுப்பாடுகளால் பெருமளவிலான சோமாலியர்களுக்கு உதவ முடியவில்லையென உதவி அமைப்புகள் தெரிவிக்கின்றன.

பஞ்ச வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நெருக்கடியின் மையமாகக் கருதப்படும் தென் மற்றும் மத்திய சோமாலியப் பகுதிகளில் போசணைக் குறைவு மட்டம் 58 வீதத்தை எட்டியுள்ளது.

இங்கு உடனடி உதவி விநியோகங்களை மேற்கொள்வது பெரும் சவாலாக இருப்பதாக உதவிப் பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் மேற்குலக உதவி அமைப்புகளின் அரசியல் காரணங்களுக்காக நெருக்கடியைப் பெருப்பித்துக் கூறுவதாக அல்-ஷபாப் குற்றஞ்சாட்டுகிறது.

இந்நிலையில் இலட்சக்கணக்கான மக்கள் நாட்டைவிட்டு வெளியேறி வருகின்றனர்.

இதேவேளை, அடுத்துவரும் அக்டோபர், நவம்பர் மாதங்களில் மழை பெய்தாலும் கூட அதன் பின்னர் பயிர்கள் வளர்ச்சியடைந்து அறுவடையாகும் வரை மேலும் பல மாதங்களுக்கு சோமாலியர்களுக்கு உணவுதவிகள் தேவைப்படுமென அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதுவொரு குறுகிய கால நெருக்கடி அல்லவென ஐ.நா.அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

உணவின்மையால் ஏற்படும் பலவீனம் இம்மக்களை இலகுவில் நோய் ஆக்கிரமிப்பதற்கு வழிவகுக்கின்றது.

இதேவேளை, வரட்சியால் கால்நடைகளின் உயிரிழப்பும் அதிகரித்துள்ளது. கால்நடைகளை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழும் மக்களும் இதனால் பெரும் நெருக்கடியைச் சந்தித்துள்ளனர்.

இன்னும் பல வாரங்களுக்கு மழை பெய்வதற்கான அறிகுறிகள் தென்படாமையால் நெருக்கடி மேலும் தீவிரமடைந்திருப்பதாக செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் பின்னணியிலேயே இலட்சக்கணக்கான உயிர்கள் இன்று மரணத்தின் விளிம்பை எட்டியுள்ளன.

ஆனால், அல்-ஷபாப் போராளிகளினாலேயே உதவி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லையென மேற்குலகம் கூறும் காரணம் எந்தளவுக்கு யதார்த்தமானது என்பது சிந்தனைக்குரிய விடயமாகும்.

அல்-ஹைடாவுடன் இணைந்த ஒரு போராளிக் குழுவே அல்-ஷபாப் ஆனால் அல்-ஹைடாவையே ஒழிப்பது என்ற பேரில் ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் படை நடவடிக்கையையும் சர்வாதிகாரியிடமிருந்து மக்களைப் பாதுகாப்பது என்ற பேரில் லிபியாவில் தாக்குதல்களையும் ஆரம்பித்த வல்லரசு நாடுகளால் அல்-ஷபாப் போராளிகளைக் கட்டுப்படுத்தி உணவு விநியோகத்தை மேற்கொள்ள முடியவில்லை என்பது கேலிக்குரிய விடயமாகும்.

தமது சொந்த பொருளாதார, பிராந்திய நலன்களை அடிப்படையாக வைத்து காய்நகர்த்தும் இத்தகைய நாடுகள் சோமாலியாவில் இதுவரை தமக்குத் தேவையான வளங்கள் எதனையும் காணாததே இவ்வாறான அசமந்தப் போக்குக்கான காரணமாகும்.

எத்தனையோ வயிறுகள் பசித்திருக்கும் போது தமது கேள்வியைத் தக்க வைப்பதற்காக அளவுக்கதிகமான விளைச்சல்களைக் கடலில் கொட்டும் முதலாளித்துவ நாடுகளுக்கு எங்கே புரியப் போகின்றது பஞ்சத்தின் கொடுமை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100911-1.indd 23









பிரநீத்தா

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் கொழும்பு 15, எலி ஹவுஸ் ரோட், 68ஆம் இலக்கத்தில் 2011ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 10ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org